வேதாகம வார்த்தையைப் போதிக்கும்....

# சத்தியவசனம்

வருடம் 39 வெளியீடு 4



**வாழ்க்கை என்பது
தேவனை சேவிக்க
பூமியில் மனிதனுக்கு
வழங்கப்பட்ட
ஒரேயொரு வாய்ப்பு!**

செப்டெம்பர்
ஒக்டோபர் 2011
நவம்பர்



மீட்பின் கிரயம்
பக்கம் 7

நட்பின் படிகள்
பக்கம் 11

சிங்கமும் ஆட்டுக்குட்டியும்
பக்கம் 16

செப்டெம்பர் - அக்டோபர் - நவம்பர் 2011

நிர்வாக இயக்குனர் :
**திரு. மயுக பெரேரா**
முகாமையாளர் :
**திரு. ரவிசங்கர் சண்முகம்**
சஞ்சிகை ஆசிரியர் :
**திரு. வஷ்னீ ஏனர்ஸ்ட்**

வருடம் - 39 வெளியீடு - 4

# சத்தியவசனம்

## சஞ்சிகை

04 **சந்தேகத்திற்கிடமான நியமங்கள்**
திரு. டி. ஒ. றோவாட்.

07 **மீட்பின் கிரயம்: இரத்தம்**
ஓர்ட். எல். மோறோ

11 **நட்பின் படிகள்**
டாக்டர் வுட்ரோ குரோல்

13 **கன்மலையின்மேல் தன் வீட்டைக்**
சுவிசேஷகர் சுசி பிரபாகரதாஸ்

16 **சிங்கமும் ஆட்டுக்குட்டியும்**
சாந்தி பொன்னு

20 **ஆவியின் வரங்கள்**
தியோடர் எச். எப்.

24 **கேள்வி பதில்**
டாக்டர் ஆர். ஸ்டான்லி

28 **சிறுவர் சோலை**

30 **ஏதேன்**

BACK TO THE BIBLE

**SATHIYAVASANAM**
**P.O. Box 1012,**
**Colombo, Sri lanka.**
**Tele : 011-2695441,**
**Fax : 011-2698843**
**E-mail : svsl@sltnet.lk**
**Web : www.sathiyavasanam.lk**



# முதன்மை ஆசிரியரிடமிருந்து....

Mayukha Perera
Managing Director
Back To The Bible

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

இயேசுவானவர் கூறுகின்றார்: “வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.” இந்த புத்துணர்வுதரும் வார்த்தையை நான் சமீபத்தில் கேட்டபோது, எனது உணர்வுகள் இந்தப் படத்திலுள்ள கழுதையைப்போல இருந்தது.



உண்மையில் தேவனைச் சார்ந்து வாழுகின்றேன் என்று என்னால் கூறமுடிந்தாலும் ஒருசில நேரங்களில் முழு உலகத்தின் பாரத்தையும் குறிப்பாக எனது பாரத்தை என் தோளின்மீது சுமப்பதாக உணருகிறேன். அநேக காரியங்களைச் செய்துமுடித்தாக வேண்டும் எனக் காண்கிறேன். பிரச்சனைகளைத் தீர்க்க, அதைக் குறிப்பிட்ட நாட்களுக்குள் முடிக்க, மக்களை கரிசனையோடு கவனிக்க, அர்ப்பணிப்பை நிறைவேற்ற ஏராள மான முன்னுரிமைகளை சமாளிக்கவேண்டியுள்ளது. எதையும் நிறுத்திவிட முடியாது. தொடர்ந்து செயற்படவேண்டும். இதனால் விரைவில் களைப் படைந்து சோர்வடைந்துவிடவும் கூடும். பாரமானது கடினமாக இருக்கின்றது. அது அளவு கடந்துவிட்டது. திடீரென அனைத்தும் சாய்ந்துவிட்டது.

நீங்களும் என்னுடன் இந்த வேலைப்பளுவை உணரக்கூடும்.

இவ்வாறாக, எண்ணிக்கொண்டிருந்தபோது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறிய வார்த்தைகள் எனக்குள் புத்துணர்வானது.

**“வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன். என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது”** (மத்தேயு 11:28-30).

**என்னிடத்தில் வாருங்கள்.** தேவனுக்குரிய வேலைகளைச் செய்வதில் அதிக மும்முரமாக இருப்பதினால், நான் அவருடனான நேரத்தைக் குறைத்து வருகின்றேன் என்பதை உணர்ந்தேன்.


**என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்.** அவரது ஆலோசனைகளைக் கேட்கவும் கற்றுக்கொள்ளவும் நான் இடங்கொடுக்கவில்லை என்பதை உணருகின்றேன். அவருடைய வழிநடத்துதலை எதிர்பாராமல் என்னுடைய கணிப்பிலேயே அதிகம் சாய்ந்திருக்கின்றேன். உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார். (நீதிமொழிகள் 3:5-6).

**நான் இளைப்பாறுதல் தருவேன்.** “உன் ஆத்துமாவுக்கான இளைப்பாறுதலைக் கண்டடைவாய்” என இயேசுவானவர் தம்மிடம் வருகின்றவர்கள், தாம் போதிப்பவர்கள் பெறும் நன்மையைக் குறிப்பிடுகின்றார். இந்த இளைப்பாறுதலை நான் இழந்துவிடுகின்றேனோ என உணர்ந்தேன்.

இளைப்பாறுதல் என்பது வேலை இல்லாதபடியினால் எடுக்கின்ற ஓய்வு அல்ல. நாம் சுமக்கவேண்டிய பாரம் உண்டு. ஆனால் அது இலகுவானதாக இருக்கின்றது. இது எமக்காக நாம் ஏற்றுக்கொண்ட சுமை அல்ல. இது இயேசுவானவர் தாமே எமக்காக அளித்த சுமை. இது எமது சொந்த முயற்சியினால் சுமக்கக்கூடிய பாரம் அல்ல. எமக்கு அவருடைய உதவி உண்டு. வழிகளிலெல்லாம் நான் பெற்றுக்கொள்ளும் அனைத்து சுமைகளையும் தினமும் அவரிடம் ஒப்படைக்கவேண்டும் என்பதை உணர்ந்தேன். தேவனிடம் ஒப்படைக்காவிட்டால் நானும் ஒரு கழுதைதான்! இனி நான் அப்படி இருக்கப்போவதில்லை! நீங்கள் எப்படி?

கர்த்தரின் பணியில்,

**மயுக பெரேரா**




# சந்தேகத்திற்கிடமான நியமங்கள்:

- டி. ஓ. ஹோவாட் -

**சந்தேகத்திற்கிடமான காரியங்கள் மீது சந்தேகப்படுவதை நிறுத்துங்கள்!**

வேதாகமம் ஒருநாளும் மாறாத புத்தகம். ஆனால் நாம் மாறிக்கொண்டேயிருக்கும் உலகத்தில் வசிக்கின்றோம். ஒவ்வொரு மனிதரும் அனுசரிக்கும் பழக்கவழக்கங்கள், நினைக்கும் எண்ணங்கள் யாவும் மாறிக்கொண்டிருக்கின்றன. நாகரீகமும் நடையுடை பாவனைகளும் ஒவ்வொரு மனிதர்களது ஈடுபாடுகள் யாவும் மாறிக்கொண்டே இருக்கும்போது ஒரு விசுவாசி எப்பொழுது எவ்விதம் தன் நிலையிலிருந்து மாற வேண்டும்? எப்பொழுது மாறாமல் இருக்கவேண்டும்?

விசுவாசிகளை அடிக்கடி சங்கடப்படுத்தும் ஒரு கேள்வி என்னவென்றால்: நிலையான சத்தியங்களைக் கொண்ட வேதாகமத்தின் வெளிச்சத்தை ஆதாரமாகக் கொண்டு மாறிக்கொண்டே போகும் உலகபோக்கிற்கு ஏற்றபடி ஜீவிப்பது எப்படி? மாறிக்கொண்டேபோகும் இவ்வுலகத்தில், வேதாகமத்தில் குறிப்பாக சொல்லப் படாத சில விஷயங்களை நாம் சந்திக்கும்போது நம் வாழ்க்கைமுறையில் அவற்றிற்கு முகங்கொடுப்பது எப்படி? இந்த கேள்விகளைக்கண்டு கலங்கவேண்டாம். தேவன் வாழ்வுமுறைக்கு வழிகாட்டும் வார்த்தையை யும் நியமங்களையும் வேதாகமத்தில் கொடுத்திருக்கி றார். நமது மனம், உணர்ச்சி, சித்தம் ஆகியவற்றை உபயோகித்து இந்த நியமங்களை கடைப்பிடிக்க அவற்றை நம்மிடம் விட்டுவிட்டார். நம் கிறிஸ்தவ நடத்தை மற்ற நபருடைய அபிப்பிராயத்திலிருந்தோ, அவருடைய மனச்சாட்சியிலிருந்தோ வராமல் நாமே ஆண்டவருடைய வார்த்தையை விளங்கிக்கொள்வதி லிருந்து வருவதற்காக ஆண்டவர் கொடுத்திருக்கும் வேதாகம நியமங்களை நாம் அறிந்துகொள்வது அவசியமானதாகும்.

## தகுதியைப்பற்றிய நியமம்:

"எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது" (1கொரிந்தியர் 6:12). ஆகையால் நாம் கேட்கவேண்டிய கேள்வி என்னவென்றால்: "நான் செய்ய விரும்பும் இந்தக் காரியம் எனக்குத் தகுதியான நடத்தை தானா" மேற்கூறிய வசனத்திற்கு முன்னே எழுதப்பட்ட வசனங் களை வாசிப்பீர்களாகில் பவுல் கொரிந்து சபையினரின் பழைய வாழ்க்கையிலிருந்து ஆண்டவர் அவர்களை மீட்டதைப் பற்றி எழுதியிருப்பதைக் காணலாம். மீட்ப டைந்தவர்களிடமே இந்தக் கேள்வி கேட்கப்படுகின்றது. ஆகவே சந்தேகத்திற்கிடமான காரியம் கிறிஸ்துவிடம் நாம் கொண்டுள்ள புதிய உறவிற்கு உகந்ததா? இக் காரியம் என் பழைய வாழ்க்கையை ஞாபகப்படுத்து கிறதா? இதை அனுபவித்தால் என் எதிர்கால நிலை இனிதாயிருக்குமா? இந்தக் கேள்விகளுக்கு பதில் தயக்கம் தருமாயின் அதைவிட்டு விலகவேண்டும்.

## அடிமைப்படுவதைப் பற்றிய நியமம்:

"எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் நான் ஒன்றிற்கும் அடிமைப் படமாட்டேன்" (1கொரிந்தியர் 6:12). சந்தேகப்படக்கூடிய காரியம் செய்வதால், நமது சரீரம், ஆத்துமா, ஆவிக்கு உண்டாகும் விளைவுகளைப் பற்றி யோசிக்கவேண்டும். ஏனென்றால் நான் என்னை எதுவும் அடிமையாக்க அனுமதிக்கக்கூடாது. இந்த இடத்திலே உணவைப்பற்றி பவுல் பேசுகிறார். அந்தக் காலத்திலே புகைபிடித்தல், டெலிவிஷன் (T.V), லாகிரி வஸ்துக்கள் (Drugs), சினிமா, இதைப்போன்ற பிரச்சினைகள் இருக்கவில்லை. எனினும், இந்த விஷயங்கள் எல்லாவற்றிலும் எதற்கும் நாம் அடிமைப்பட்டு விடக்கூடாது என்ற நியமத்தின் அடிப்படையில் மதிப்பிட்டு ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும்.

அடுத்தமுறை புகைபிடிக்கிற ஒருவனை "நீ உன் சாட்சியை கெடுக்கிறாய்" என்று சொல்ல விரும்பு வாயாகில் உனக்கு காப்பி, டீ மேலேயோ, பிரியாணி மேலேயோ மற்றும் எந்தவிதத்திலோ உனக்கிருக்கும்

அடிமைத்தனத்தைப் பற்றி ஞாபகப்படுத்திக்கொள்! அடிமைத்தனம் கண்கள் மூலமாகவோ, வாயின் மூலமாகவோ, மூக்கின் மூலமாகவோ நுழையக்கூடும். ஆகவே அது எதுவாயிருந்தாலும் உன் நேரத்தை, மனதை, சிந்தையை பாதிக்குமாயின் அதன் விளைவு களை அறிந்து விலகவேண்டும். சந்தேகம் உண்டாக் கும் காரியங்களைச் சரியாகப் புரிந்துகொண்டு நமது ஆண்டவரை விட்டு விலகச் செய்யும் எந்த அடிமைத் தனத்திற்கும் தூரமாக விலகிச்செல்ல வேண்டும்.

## பக்திவிருத்தியைப் பற்றிய நியமம்:

"எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் பக்திவிருத்தியை உண்டாக்காது"(1கொரிந்தியர் 10:23). இந்த வசனத்தை வைத்து "வேதத்திலே தெளிவாக செய்யக்கூடாது என்று சொல்லப்பட்ட காரியங்களாக இல்லாவிடில், அவை சரியானவைகள்" என்று பவுல் சொல்லுகிறார் என்று அர்த்தப்படுத்தக்கூடாது. இவர் சந்தேகம் தரும் காரியங்களைக் குறித்தே பேசுகிறார் என்பதை விளங் கிக்கொள்வது அவசியம். கேள்வி என்னவென்றால், "இந்தக் காரியம் என்னை ஆவியில் வளர்ச்சியடையச் செய்யுமா? அல்லது ஆவிக்குரிய வளர்ச்சிக்கும் நமது ஆண்டவருடன் நடப்பதற்கும் தடையாயிருக்குமா? கிறிஸ்துவின் மீதிருக்கும் அனலைக் குறைக்குமா? என்னுடைய ஜெப ஜீவியத்தைத் தடைசெய்யுமா? என் நேரத்தின் கிரம ஒழுங்கை குறைக்குமா?" என கேள்வி கேட்டுப் பார்த்து, அப்படி நடக்குமாயின், அதனை மறுக்கவேண்டும். மற்றவர்கள் என்ன செய்தாலும் அதைப் பார்த்து நம் வழியை நிர்ணயிக்கவே கூடாது. இந்நியமத்தின்படி ஆண்டவர் என்னுடன் என்ன பேசுகி றார் என்பதுதான் பக்திவிருத்திக்கு முக்கியமாகும்.

## பலவீனரைக்குறித்த நியமம்:

"ஆகிலும் இதைக்குறித்து உங்களுக்கு உண்டாயிருக்கிற அதிகாரம் எவ்விதத்திலும் பலவீன ருக்குத் தடுக்கலாகாதபடிக்குப் பாருங்கள்"(1கொரி.8:9)

பலவீனர் என்பது கிறிஸ்துவுக்குள் இருக்கும் அதிகாரத்தை சரியாக விளங்கிக்கொள்ளாத கிறிஸ்த வர்களைக் குறிக்கும். பவுல் இருந்த காலத்திலே இது மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள முயற்சிசெய்து கொண்டிருந்தவர்களைக் குறித்தது. நமது நடத்தை அப்படிப்பட்டவர்களை எவ்விதம் பாதிக் கும் என்பதை நாம் சற்று கவனிக்கவேண்டும். இந்த நியமத்தை கடைப்பிடிக்க நாம் செய்யவேண்டியது என்னவென்றால், கிறிஸ்துவில் உனக்கிருக்கும் சுயாதீனத்தினாலே நீ செய்யும் காரியம், சத்தியத்தை முழுவதும் அறிந்துக்கொள்ளாத ஒரு சகோதரனுடைய நம்பிக்கையை அசைக்கும்படி செய்துவிடக்கூடாது. இவ்விதம் சந்தேகம் விளைவிக்கும் காரியங்களை விட்டுவிலகுவது கிறிஸ்துவில் இருக்கும் சுயாதீனத்தை கைக்கொள்வதைவிட சிறந்ததாகும்.

இரட்சிக்கப்படாதவர்களுக்கு முன் இருக்க வேண்டிய சாட்சியின் நியமம் "நீங்களும் யூதருக்கும், கிரேக்கருக்கும், தேவனுடைய சபைக்கும் இடறலற்ற வர்களாயிருங்கள்" (1கொரிந்தியர் 10:33) என்ற வசனத் தில் காண்கின்றோம். இது ஒரு முக்கியமான சத்தியம். எத்தனையோமுறை தேவனை அறிந்த சபை விசுவாசி களே இரட்சிக்கப்படாதவர்களை தங்களுடைய அற்ப மான சாட்சியினால் ஆண்டவரிடம் இழுக்கமுடியாதபடி செய்துவிடுகின்றனர். இவ்விதம் கெடுதி செய்த பிறகு அவர்கள் மனதை மாற்றுவது மிகவும் கஷ்டம். இன்னார் ஒரு கிறிஸ்தவன் என்றால் அவரிடம் இருந்து எனக்கொரு உபதேசமும் தேவையில்லை? என்று இரட்சிக்கப்படாத ஒருவர் சொல்வதை கேட்டிருக்கி றீர்களா? நீ செய்யலாமா, செய்யக்கூடாதா என்று சந்தேகப்படும் காரியத்தினூடாக மற்றவர்களுக்கு நீ சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு இடையூராக இருக்குமா? என்று சோதித்து அதை விட்டு விலகவேண்டும்.

## நல் மனசாட்சியின் நியமம்:

"கற்பனையின் பொருள் என்னவெனில், சுத்த மான இருதயத்திலும் நல்மனச்சாட்சியிலும் மாயமற்ற விசுவாசத்திலும் பிறக்கும் அன்பே" (1தீமோத்தேயு 1:5)

மனச்சாட்சியைப் பற்றி சாதாரண மனிதன் விளங்கிக்கொள்ளாத அநேக காரியங்கள் உண்டு. நம் மனச்சாட்சி நமக்கு பிழையற்ற வழிகாட்டியல்ல. அதுவும் தவறுவிடும். வேதாகமம்தான் பிழையற்ற வழிகாட்டி. இருந்தபோதிலும் ஒரு விசுவாசி தவறு செய்யும் போது அது குற்றம் என்று காட்டுவதற்கு ஆண்டவர் அவனது மனசாட்சியை தெளிவாக உபயோ கிக்கிறார். சிலவேளை மற்றவர்கள் ஒரு விசுவாசியை தீர்ப்பு செய்யாமல் இருக்கலாம். ஆனால் அவன் மனச்சாட்சி நிச்சயமாகத் தீர்ப்பளிக்கும்.

ஒரு விசுவாசி ஆண்டவருடைய வார்த்தையில் வளரும்போது, அவனுடைய மனசாட்சி ஆண்டவரு டைய சித்தத்தின் தூண்டுதல்களுக்கு மனம்கொடுக்க ஏவுகிறது. அவனுடைய மனசாட்சி மூலம்தான் பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய வார்த்தைகளின் நியமங் களை கடைபிடிக்க ஏவுகிறார். ஆகவே, நான் செய்ய விரும்பும் காரியம் அல்லது செய்துகொண்டிருக்கும் காரியம் எனது மனசாட்சிக்கு கஷ்டம் கொடுத்துக் கொண்டிருக்குமேயாகில் அதை விட்டுவிலகவேண்டும்.

## ஸ்தோத்திரிக்கும் நியமம்:

"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து" (எபேசியர் 5:20)

நாம் செய்ய விரும்பும் அல்லது செய்து கொண்டிருக்கும் ஒரு காரியத்திற்காக ஆண்டவரை ஸ்தோத்திரிக்க முடியுமா? "நான் இந்த காரியத்தைச் செய்ய முடியுமாதலால் அல்லது இந்த வார்த்தை

களைப் பேச முடிவதால் அல்லது இந்த இடத்திற்குப் போக வழியிருப்பதால் உம்மை துதிக்கிறேன்" என்று சொல்ல முடிந்தால் அதைச் செய்யுங்கள். அவரை ஸ்தோத்திரிக்க முடியாவிட்டால் அந்தக் காரியத்தை ஏற்றுக்கொள்ளாதிருங்கள்!

மேலே கூறப்பட்ட நியமங்களைத் தவிர, ஒரு விசுவாசிகளுக்கு வேறே நியமம் இல்லை என்று சொல்வதற்கு இல்லாவிட்டாலும், சந்தேகம் விளைவிக்கும் காரியங்களுக்கு உண்மையாய் உபயோகிப்பாயாகில் உன் நடத்தை என்னவாயிருக்கவேண்டும் என்று அறிந்துகொள்வாய். ஆனால், நீ இதைச் செய்யாமல் இதனைச் செய்யும்படி, இன்னொரு கிறிஸ்தவ சகோதரனுக்கு அப்படியே உபயோகிக்காதே. சகோதரர் ஒருவர் வேதாகமத்தில் செய்யக்கூடாது என்று திட்டமாய் சொல்லியிருப்பதை சொல்வாரேயானால் மட்டுமே அது தவறு என்று தீர்ப்புசெய்து அவரை திருப்புவதற்கு முயற்சிசெய். இக்கட்டுரையிலே வேதாகமத்தில் கூறப்படாத காரியங்களை செய்வதைப்பற்றி கவனித்தோம். ஆகவே, இவைகளைப் பற்றி மற்றவர்களுக்கு தீர்ப்பு எடுக்கையில் மிக ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும்.

நமக்கு ஆண்டவர் தகாதது என காண்பிப்பது மற்ற சகோதரர் ஒருவருக்கு தகாததாய் இல்லாமல் இருக்கலாம். உதாரணமாக சில சாதாரண காரியங்கள் நம்மை பழைய பாவ ஜீவியத்திற்கு இழுத்துச் செல்லக் கூடியதால் நாம் அவைகளை தவிர்க்க முயலுவோம். அதே காரியங்கள் மற்றவர்களுக்கும் ஏற்றதல்ல என்று நாம் அவர்களை கண்டிப்பது தவறாகும். மேற்கூறிய நியமங்களை உன் ஜீவியத்தில் கையாண்டதினால் கிடைத்த அறிவுறுத்தல்களை மற்றவர்களும் ஏற்றுக் கொள்ளவேண்டும் என ஆத்திரப்படாதே. ஏனென்றால் "நீ உன் சகோதரனைக் குற்றவாளியென்று தீர்க்கிறதென்ன? நீ உன் சகோதரனை அற்பமாய் எண்ணுகிறதென்ன? நாமெல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போமே" (ரோமர் 14:10).

தேவ ஆவியானவரின் தலைமையில் வாழும் வாழ்க்கை ஒரு விசுவாசியை ஒருநாளும் நியமங்களை மீறுவதற்கு இழுத்துச் செல்லாது. மாறாக, அவனைத் தொடர்ந்து, தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருக்க உதவிசெய்யும்" (ரோமர் 8:29). கர்த்தர் தாமே நம் ஒவ்வொருவரையும் நல்வழியில் நடத்துவாராக!


**எமது சத்தியவசன வேதபாடம்.**

வேதாகம சத்தியங்களை அறிந்துகொள்ள ஆர்வமுள்ளவர்களுக்காக தயாரிக்கப்பட்ட, எமது சத்தியவசன வேதபாடங்களை நீங்கள் வீட்டிலிருந்தே தபால்வழி ஊடாக கற்றுக்கொண்டு அழகான நற்சான்றிதழ்களைப் பெற்றிடவும் வேதாகமத்தை தெளிவாக கற்றறிந்திடவும் எமக்கு எழுதுங்கள்.

**எமது சத்தியவசன ஆலோசனைகள்.**

நடைமுறை வாழ்வில் நீங்கள் சந்திக்கின்ற பலவிதமான பிரச்சனைகளுக்கு, நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கவும் வேதாகம ரீதியில் பதிலளிக்கவும் ஆயத்தமாக இருக்கிறோம். உங்கள் பிரச்சனைகளை எமக்கு எழுதி தேவ ஆலோசனைகளை இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள். இரகசியம் பேணப்படும்.

**எமது சத்தியவசன கேள்வி பதில்கள்.**

வேதாகமத்திலிருந்து உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால், அவற்றை முடிந்தளவு இலகுவாக நீங்கள் விளங்கிக்கொள்ளத்தக்கதாக வேதாகமத்திலிருந்து பதில்களை நீங்கள் பெற்று ஞானவான்களாக மாறிட உங்கள் கேள்விகளை சத்தியவசனம் "கேள்வியும் பதிலும்" பகுதிக்கு எழுதி அனுப்புங்கள்.

**எமது சத்தியவசன ஜெப பங்காளர்கள்:**

எமது மும்மொழி ஊழியங்களுக்காகவும், ஊழியர்களுக்காகவும் தினமும் ஆண்டவரிடம் பிரார்த்தனை செய்து, இவ்வூழியத்தை தங்கள் மேலான ஜெபத்தினால் தாங்கி வருகிறார்கள். இவர்களுக்கு துதி ஜெபவிண்ணப்பம் மற்றும் வருட இறுதியில் கலண்டர் என்பன இலவசமாக அனுப்பிவைக்கப்படும்.

**எமது சத்தியவசன சஞ்சிகை, தியானநூல் வாசகர்கள்**

எமது சத்தியவசன சஞ்சிகை, தியானநூல், ஜெப விண்ணப்பப்படிவம் பெறுகின்ற வாசகர்கள் தவறாமல் எம்முடன் தொடர்புகொண்டு உங்கள் சந்தா புதுப்பிக்கப்பட்டுள்ளதா என்பதை அறிந்து இந்த ஊழியத்தை தொடர்ந்து அன்புடன் தாங்கும்படியாக உங்களை அழைக்கின்றோம்.

மேலதிக விபரங்களுக்கு: **சத்தியவசனம், தபால் பெட்டி எண் 1012, கொழும்பு, இலங்கை.**

# மீட்பின் கிரயம்: இரத்தம்



- ஓர்ட். எல். மோறோ -

**வா பாவி மலைத்து நில்லாதே வா**
**உந்தனுக்காகவே நானே அடிபட்டேன்**
**உன் பாவத்தைச் சுமந்தேன்**
**சிந்திய என் திருரத்தத்தால் உன் பாவம்**
**தீர்த்து விட்டேன் பாவி வா.**

மீட்பின் கிரயம் மதிப்பிலடங்காத ஒன்று. கடவுளையும் மனிதனையும் ஒப்புரவாக்கும் செயலினை ஒன்றுபடுத்தும் ரகசியத்தை உணர்வதற்கு முதலில் நாம் இதனை விளங்கிக்கொள்ளவேண்டும். மீட்பு அதிசயமானது. பரம இரகசியம் நிறைந்தது. பல ஆண்டுகள் சென்றாலும் உண்மையில் குறிப்பிடுபவை களை விளங்கிக்கொள்வோம் என்பது சந்தேகம்தான். ஆனாலும் "அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்த படியால் நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம்" எனக் கூறத்தக்கதாக நம்மால் விளங்கிக்கொள்ளமுடியும். வேதாகமத்தை சிறிது படித்தாலே மீட்பின் கிரயமானது, கிறிஸ்து சிந்திய இரத்தமென்பது தெளிவாகும்.

பழைய ஏற்பாட்டில் கூறப்பட்ட பலியீட்டுப் பிரமாணங்கள் நிறைவேறியதைப் புதிய ஏற்பாடு காட்டு கிறது. இதை "கிறிஸ்துவானவர் வரப்போகிற நன்மை களுக்குரிய பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டு, கையினால் செய்யப்பட்டதாகிய இந்தச் சிருஷ்டி சம்பந்தமான கூடாரத்தின் வழியாக அல்ல, பெரிதும் உத்தமமுமான கூடாரத்தின் வழியாகவும், வெள்ளாட் டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தி னாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார். அதெப்படியெனில், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தமும், தீட்டுப்பட்டவர்கள்மேல் தெளிக்கப்பட்ட கடாரியின் சாம்பலும், சரீரசுத்தியுண்டாகும்படி பரிசுத்தப்படுத்துமா னால், நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினு டைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ் செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியை களறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்...! அவர் தம்மைத்தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும்பொருட்டாக இந்தக் கடைசிக்காலத்தில் ஒரேதரம் வெளிப்பட்டார் (எபி 9:11-14,26).

### தேவைகளை எல்லாம் தீர்த்தார்.

தேவனுடைய குமாரன் எல்லோருக்காகவும் தம்மை மீட்கும் பொருளாக ஈந்தார். மீட்புக் கிரயம் செலுத்திய அவரில் மட்டுமே நமக்கு மீட்பு உண்டு. சிலர் மீட்புப் பொருளை நாமாக செலுத்தமுடியாது. அதை வேறொருவர் செலுத்திவிட்டார் என்பதைச் சற்று சிந்திப்பது கிடையாது. அதனால் ஆத்மீக விஷயத்தில் நாம் ஒரு மயக்கத்திற்கு உள்ளாகிறோம். நமது நடவடிக்கைகள் தேவன் ஏற்றுக்கொள்ளக்கூடியவை களாக இருந்தால் நன்று. எனினும் இவை கடவுளைத் திருப்திப்படுத்தா. நம் மனச்சாட்சிக்கும் நிறைவுதரா. நாம் நமது கிரயத்தைச் செலுத்தி நமக்காக நின்று நம்மை அடிமைச் சந்தையிலிருந்து வாங்கியவரின் செயலினையே முழுக்க முழுக்க நம்பி விசுவாசித்தால், கடவுள் நம்முன் வைத்துள்ள வாக்குத்தத்தங்களின் நிச்சயத்தால் அமைதி பெறலாம். மீட்பர் பிதா வைத்தி ருந்த அனைத்தையும் செய்து முடித்ததால் இவை நமக்குக் கிடைத்தன.

இது விளங்கினால் இரத்தத்தினால் ஒப்புரவா குதலினை அற்பமாக எண்ணோம். மனிதனின் கீழான பாவத்தினையும், அவன் பெறவேண்டிய மீட்பின் பெருங் கிரயத்தையும் அறியாதோரே இதை அற்பமாகக் கருதுவார்கள். மரணம் அனைவருக்கும் வருவதற்குப் பாவம் காரணமாயிற்று. நாம் வாழ்வு இழந்தவர்கள். இதையிட்டு நாமாக ஒன்றுஞ்செய்ய முடியாத அவல நிலையில் உள்ளோம். கடவுளின் மீட்பு வழியை ஏற்கா விட்டால், அவரது நியாயத்தீர்ப்புக்கு நாம் ஆளாகி அவ்வினையை அனுபவிக்கவேண்டும்.

நான் மீட்கப்படும் பொருட்டு கடவுள் அங்கீகரிக்கப்பட்டவரும் எனக்கு நிறைவு தருபவரு மான ஒரு நபர் எனக்காக தம் உயிரைக் கொடுக்க

வேண்டும். "நானே நல்ல மேய்ப்பன். நல்ல மேய்ப்பன் தன் ஆடுகளுக்காக தன் ஜீவனைக் கொடுக்கின்றான்" (யோவா 10:11) என்று ஒரு பேச்சுக்காக இயேசு சொல்லவில்லை. காணாமற்போன ஒரு ஆட்டையும் மீட்பதற்காக அவசியமானதைச் செய்யத் தாம் வந்த தாக அவர் அறிவித்தார்.

## புதிய ஜீவன்

"மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது; நான் அதை உங்களுக்குப் பலிபீடத்தின்மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்படிக்குக் கட்டளையிட்டேன்; ஆத்துமாவிற்காகப் பாவ நிவிர்த்தி செய்கிறது இரத்தமே" (லேவி 17:11) என இரத்தப் பலியின் பெறுமதியை கிறிஸ்து வருதவற்கு நீண்ட காலத்திற்கு முன்னமே கடவுள் தெளிவாக்கியிருந்தார்.

நமது மீட்பையும் அதனோடு தொடர்பான அனைத்தையும் பெற்றுத் தந்தது கர்த்தர் இயேசு கிறிஸ்துவின் உயிராகிய இரத்தமாகும். மீட்புக் கிரயத் தில் அவரது இரத்தம் ஒரு ஆரம்பமாகும். "உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமா யிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்ல வென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர் களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்"(1கொரி 6:19,20) என்று செலுத்தப்பட்ட கிரயம் காரணமாக தூய்மையாய் வாழும்படி பவுல் அப்போஸ்தலன் விசுவாசிகளை ஏவினார்.

"உங்களை அழைத்தவர் பரிசுத்தராக இருக் கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லா வற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே. அன்றியும் பட்சபாதமில்லாமல் அவனவனுடைய கிரியைகளின்படி நியாயந் தீர்க்கிற வரை நீங்கள் பிதாவாகத் தொழுதுகொண்டு வருகிற படியால், இங்கே பரதேசிகளாய்ச் சஞ்சரிக்குமளவும் பயத்துடனே நடந்துகொள்ளுங்கள். உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்து வந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக் களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப் படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே." (1பேதுரு 1:15-19) எனக் கிறிஸ்தவர்களைத் தூய வாழ்க்கைக்கு அதேபாணியில் பேதுருவும் அழைத்தார்.

மீட்பின் கிரயத்தை எப்போதும் மனதில்வைத்து கொள்ளுமாறு பேதுரு கடவுளுடைய ஜனங்களைத் தைரியமாக எச்சரித்தார். அவர் "தங்களைக் கிரயத்துக் குக்கொண்ட ஆண்டவரை மறுதலித்து, தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக்கொள்ளுவார்கள்" (2பேதுரு 2:1) என இவ் உண்மையை ஏற்காதோரைக் கள்ளப் போதகர்கள் எனப் பிரித்துள்ளார்.

## பிரதான செய்தி:

அப்போஸ்தலர் உரைகளிலும் இரத்தக் கிரயம் என பொருள் இல்லாமல் போகவில்லை. "அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத் தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது" (எபே 1:7) என்பதைப் போன்று பல வாக்கியங்களால் கிறிஸ்து மூலம் கிடைத்த மீட்பின் பெருங் கிரயம் பற்றி விசுவாசிகள் ஓயாது ஞாபகப்படுத்தப்பட்டனர். பழைய ஏற்பாட்டின் எல்லாப் பலிகளினதும் நிறைவேறுதலாகத் தாம் உள்ளதை இயேசு உணர்ந்து கடைசி இராப்போசனத்தின்போது பாத்திரத்தை எடுத்து சீஷரிடம்... "நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள். இது பாவ மன்னிப்புண்டா கும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக் கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது" (மத் 26:27, 28) என்றார்.

ஆண்டவரின் உலக ஊழியத்திற்குப் பின் நீண்டகாலம் வாழ்ந்த அப்போஸ்தலன் யோவான் "நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவியவர்" (வெளி 1:6) எனச் சாட்சி கொடுத்தார். "கழுவினார்" என்பது "சுத்தமாக்கினார்", "விடுவித்தார்". பாவத்தின் தண்டனை யிலிருந்து விடுதலையாக்கினார் எனப் பொருள்படும். இது கிறிஸ்துவின் இரத்தத்தினால் செய்துமுடிக்கப்பட்ட தென யோவான் கூறினார். "அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்." (1யோவான் 1:7)

நாம் "அக்காலத்திலே கிறிஸ்துவைச் சேராத வர்களும்... வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத் தில் தேவனற்றவர்களுமாயிருந்தீர்களென்று நினைத்து கொள்ளுங்கள். முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்." (எபே 2:12,13) என்பதை எளிதில் மறந்துவிடலாம். இத்தகைய மாட்சி மிக்க உண்மையை அனுபவிக்கும் எவரும், தாம் கடவுளண்டை சேர்வதற்காகச் செலுத்தப்பட்ட தமக் கான கிரயத்தை அற்பமாகக் கருதமுடியாது.

## சமாதானமும் நீதிமானாக்கப்படுதலும்

கடவுளோடு நமக்குள்ள சமாதானத்துக்கும் இரத்தக்கிரயமே அடிப்படையானது. "அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக் கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று. முன்னே அந்நியராயும் துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயும் இருந்த உங்களையும் பரிசுத்தராக

வும் குற்றமற்றவர்களாகவும் கண்டிக்கப்படாதவர்களாக வும் தமக்குமுன் நிறுத்தும்படியாக அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார்" (கொலோ 1:20,21).

அத்தோடு அவருடைய இரத்தத்தால் நாம் நீதிமான்களாக்கப்படுகின்றோம். "இலவசமாய் அவரு டைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறோம். கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதார பலியாக அவரையே ஏற்படுத்தினார்" (ரோமர் 3:24-26) என வேதாகமம் கூறுகிறது.

அப்போஸ்தலர்களும், பாடலாசிரியர்களும், பிரசங்கிகளாயிருந்தோரும் மீட்பின் கிரயம் எவ்வளவு பெரிது என மேலும் கூற விரும்பினர். அவர்களால் அதை முழுமையாகச் சொல்லமுடியவில்லை. ஆனால் இன்றோ நிலைவேறு. நம் மீட்புக்காகச் செலுத்தப்பட்ட கிரயத்தின் பெறுமதியை உணராதமையால் மீட்பின் பெருமையையும் உணராதிருக்கிறோம். இதனை விளங்கும்பொருட்டு நாம் எவ்வளவுக்கெவ்வளவு வேதாகமத்தையும் நம் இருதயங்களையும் கடவுளின் இயல்பையும் அதிகமாக அறிகிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு மீட்பர் கிறிஸ்து நம் பாவத்துக்காகச் செய்த பலியை அதிகமாய் உணர்வோம்.

கடவுளோடு நமக்குள்ள உறவின் அஸ்திபாரம் புவியில் உள்ளது. அப்படி இல்லாவிட்டால் கடவுள் முன்பாக மீட்பின் இரட்சிப்பும், நன்னம்பிக்கையும் நீதிமானாக்கப்படலும் கிடைக்காது. நீதி ஒதுக்கப் படவோ மறுக்கப்படவோ இல்லை, சரிவரத் தீர்க்கப் பட்டது. கடவுளிடம் நம்மைச் சேர்க்கும்வண்ணம் பாவ மில்லாத இயேசு பாவிகளாகிய நமது தண்டனைகளை ஏற்றார். இரட்சிக்கும் சுவிசேஷம் முறிந்த நீதியான வாளையல்ல. இரத்தத்தினாலே செந்நிறமாக்கப்பட்ட வாளையே கொண்டு வருகின்றது. (தோமா குத்றி)

அரிய பொருட்களைப் பொதுவாக அவற்றை ஆக்க ஏற்பட்ட செலவை வைத்து மதிப்பிடுவர். ஒரு பொருள் பற்றி "அதற்கு எவ்வளவு செலவு ஏற்பட்டது?" அல்லது "அதன் விலையென்ன?" என்றுதான் முதலில் கேட்போம். மீட்பின் கிரயமோ மதிப்பில் அடங்காதது. அன்பு மீட்பரைத் தழுவி அவர் நிறைவேற்றிய செயல் களிலும் வழிபாட்டிலும் அது மிளிர்கிறது. அவரை ஏறிட்டுப் பார்க்கையில் வியப்பினால் பேச்சற்றுப் போகிறோம். ஆனால் இப்போது பின்வரும் வார்த்தை களால் அவரை நாம் வழிபடக் கூடியதாயிருக்கிறது.

**தெய்வாட்டுக்குட்டியேயும்மை**
**தொழுவம் தன்னில் காண்கையில்**
**வையகம் செய்ய ஐயனே**
**வாடி நீரலைகையில்**
**தொய்ந்து வேதனைமிக**
**தோட்டந்தனில் காண்கையில்**
**திகைத்து நின்றோம் உம் கிருபை முன்**
**தெய்வ ஆடே! தூயவா.**

**'மரத்தில் மாந்தர் பாவத்தால்**
**மன்னா உம்மைக் காண்கையில்**
**உலர்ந்த எங்கள் பாவத்தை**
**உண்மையில்லா வாழ்வை நீர்**
**இரத்தந் தந்து நேசித்தீர்**
**இதயந் தந்தோம் உருகியெம்**
**பரத்து ஆட்டுக்குட்டியே**
**பகர்ந்தோம் என்றும் மகிமையே'**

**யாவருக்கும் :**

பல வேத அறிஞர்கள் மீட்பின் கிரயம் எல்லோருக்காகவும் செலுத்தப்பட்டது என்பர். விரும்பு வோர் வாருங்கள் எனச் சிலுவைக் காட்சி முடிந்ததும் அழைப்பு விடுக்கலாம். பாவத்தின் பலியாக அவர் கொடுக்கப்பட்டதால் "தேவன் உலகத்தாருடைய சகல பாவங்களையும் எண்ணாமல், கிறிஸ்து இயேசுவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார்" என்ற செய்தி கொடுக்கப்பட்டது (2கொரி 5:19). எல்லாரும் இரட்சிப்படைவார்கள் என்பது இதன் கருத்து அல்ல. வேதாகமம் மிகத் தெளிவாகக் கூறுகிறது என்னவென் றால் கிறிஸ்துவினால் கொடுக்கப்படும் ஜீவனைப் பெறாதவன் நித்திய அழிவுக்குள்ளாவான்.

**விசுவாசிப்பவர்களுக்கு இரட்சிப்பு**

கிறிஸ்து கிரயத்தைச் செலுத்துவதற்காக மட்டுமல்ல, ஜீவன் அளிக்கவும் வந்தார். "நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்" (யோவா 10:10). கிறிஸ்து உலகிற்கு மீட்பராக வந்தார். மனிதனின் மீட்பின் கிரயத்தைச் செலுத்தினார். மரித்தோரிலிருந்து எழுப்பப் பட்டார். (1கொரி 15:4) வேண்டுதல் செய்ய என்றும் வாழ்கிறார் (எபி 7:25) இவை, அவரிடம் இரட்சிக்கும் வல்லமை உண்டு என்று மட்டும் காட்டும். அவரிடம் செல்பவர்களைத்தான் அவர் இரட்சிப்பார் என்பதை மறுக்கலாகாது. அழைப்பு அனைவருக்கும் பொதுவா னது. அது செலுத்தப்பட்ட கிரயத்தை ஆதாரமாகக் கொண்டது. "நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழி தப்பித் திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத் தையும் அவர்மேல் விழப்பண்ணினார்" (ஏசா 53:6) மீட்கப்படவேண்டுமாயின் நாம் மனந்திரும்பி மீட்பின் செயலை ஏற்று மீட்பருக்கு நம்மை அர்ப்பணிக்க வேண்டியது அவசியமாகும்.

"அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்" (மத் 1:21) "நாம் பாவங்களுக் குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்

தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்." (1பேது 2:24) "இவரோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறபடியினாலே, மாறிப்போகாத ஆசாரியத்துவமுள்ளவராக இருக்கிறார். மேலும், தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல்செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார் (எபி 7:24,25) என வேதாகமம் திரும்பத் திரும்ப இரட்சிக்கக்கூடிய அவரது சக்தியையும் விருப்பத்தையும் வெளிப்படுத்துகிறது. அதேவேளையில் இரட்சிக்கப்படவேண்டுமானால் மனிதன் தன் வழிகளை விட்டு இரட்சகராகிய கிறிஸ்து இயேசுவில் நம்பிக்கை வைக்கவேண்டும் எனவும் வேதாகமம் தெளிவுபடுத்துகின்றது.

வேதாகமத்தில் முதல் புத்தகத்தில் மனிதனின் வீழ்ச்சியைப் பார்க்கிறோம். அவனை மீட்பதற்கு கடவுள் ஒரு வழிவகுத்தார். மீட்பின் கிரயத்தைக் கிறிஸ்து மீட்பராக வந்து செலுத்தினார். கடவுளுடைய வழி அவரது குமாரனில் உண்டு. குமாரனின் பக்கம் திரும்பி, அவரில் நம்பிக்கை வைக்கும்படி கடவுள் நம்மை எதிர்பார்க்கின்றார் (யோவா 1:12,13).

இரத்த சுத்தி பெற்ற பயணி
கிருபையான் இரட்சை பெற்றேன்
இராசா சாலைப் போகக் கண்டேன்
அமைதி நிறை முகமாய்
சோதனை மிக நெருக்க
வேதனை ஏதுவுமின்றி
'நுகமோ லேசு' என்றார் கான்
'சுமை பாரஞ் சற்றும் இல்லை'

தலைச்சீரா இரட்சிப்பு
கேடகமோ நல்விசுவாசம்
மார்க்கவசமோ அவர் நீதி
வீசு வாளோ அவர் ஆவி
பொல்லாங்கன் எய் அம்புநிற்க
எல்லாத்தீயும் நல்லாய் மாய்த்தார்
'நுகமோ லேசு' என்றார் கான்
'சுமை பாரஞ் சற்றும் இல்லை'

அக்கினிச் சூளை நடுவே
பயமின்றி அங்கு நின்றார்.
அருகே தீயில் துணை நின்றார்.
நான்காமவராக கர்த்தர் அங்கே
சோதனையான் சாத்தான் போல்
ஏழுமுறை மேலும் எரிய
'நுகமோ லேசு' என்றார் கான்
'சுமை பாரஞ் சற்றும் இல்லை'

புயல் மேகம், விசாரணை
மறியல், கழுமரமோ?
எல்லாங்கண்டும் 'இயேசுவுக்காய்'
என்றன் மிக மகிழ்ச்சியாய்
என்னே தேவன் என்னை தேர்ந்தார்
மாதயவாய் இப்பாட்டுக்கு
'நுகமோ லேசு' என்றார் கான்
'சுமை பாரஞ் சற்றும் இல்லை'

வென்றான் அவன் நானுங் கண்டேன்
வந்தகேடு துன்பம் யாவும்
நன்றாம் இறைவன் நித்திய
வாயில்தாண்டும் வேளை மட்டும்
மகுட மரியனையும்
வாளும் பேரும் வெள்ளைக் கல்லும்
வந்த இயேசு நுகம், சுமை
இலேசாய் கண்டோர் பெற்றார் அன்று!

(ஜான் பனியன்) ❑


## இதோ! எழுத்தாளர்களுக்கு ஒரு அரிய சந்தர்ப்பம்


**உங்களிடமுள்ள எழுத்தாற்றலை பயன்படுத்த விரும்புகின்றீர்களா? குறுநாடகம், கட்டுரைகள், தியானங்களை எழுத வாஞ்சிக்கின்றீர்களா?**

**எமது சத்தியவசன சஞ்சிகையில் உங்கள் ஆக்கங்கள் வெளிவரவேண்டுமென விரும்புகின்றீர்களா? நிகழ்ச்சிகளில் உங்கள் குறுநாடகங்கள் ஒலிபரப்பாக வேண்டுமென விரும்புகின்றீர்களா? எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.**



மேலதிக விபரங்களுக்கு :
எழுத்தாளர் தேர்வு
சத்தியவசனம்
தபால் பெட்டி இல : 1012,
கொழும்பு
☎ : 011 - 2695441
மின்னஞ்சல் : earnest@backtothebible.lk

# நட்பின் படிகள்....



- வுட்ரோ குரோல் -

ஒவ்வொரு கற்களின் மீதும் மெதுவாக அடிவைத்து கவனமாக ஒரு ஆற்றினைக் கடந்த அனுபவம் உங்களுக்குண்டா? ஒரு சிறுவனாக நான் இதைச்செய்துள்ளேன். சிலநேரங்களில் இது மிகவும் இலகுவானது. ஆனால் அநேக தடவைகளில், கற்களின் இடைவெளி தூரமாக இருக்கும்போது, அல்லது கற்கள் மிகவும் சிறியதாக இருக்கும்போது, அல்லது ஆற்றினைக் கடக்க முடியாதபடி தண்ணீர் வெள்ளமாக வழிந்தோடும் போது அந்த ஆற்றினைக் கடப்பது மிகவும் கடினமானது.

அத்தகைய தருணங்களில், ஒரு ஆற்றின் நடுவே நான் தத்தளித்துக்கொண்டிருக்கும்போது, எங்கே செல்வது என வழிதெரியாமல் ஒரு சிறிய கல்லின் நடுவே தடுமாறிக்கொண்டிருக்கும்போது வாழ்க்கையில் மிகவும் விலைமதிப்புமிக்கவர்கள் நண்பர்களே என்பதை நான் உணர்ந்திருக்கின்றேன்.

பாருங்கள், ஒரு சிறந்த பாதையைத் தெரிவு செய்யும்படி நண்பர்கள் நமக்கு தைரியத்தை அளிப்ப வர்களாக இருக்கின்றார்கள். ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும்போதும் நாம் நிலைதடுமாறாது நிற்பதற்கு நண்பர்களே எமது கைகளைப் பற்றிப்பிடித்து எம்மை நிலைநிறுத்துபவர்களாக இருக்கின்றார்கள். ஆற்றி னைக் கடந்து முடிக்கும்வரை நானும் எனது நண்ப னுக்கு அவ்வாறே உதவிகளைச் செய்யக்கூடிய வனாக இருப்பேன்.

உங்களுக்கு ஒத்தாசையாக இருக்கும் நண்பர்களைக் கொண்டிருப்பது எவ்வளவு முக்கிய மானது. உங்கள் நலனுக்காக பாடுபடுபவர்களும், நீங்கள் நெறிதவறி நடக்கும்போது நல்வழிப்படுத்து பவர்களாகவும் நண்பர்கள் இருக்கும்பொழுதுதான் கால்கள் தடுமாறாமல் வாழ்க்கையெனும் ஆற்றினை கடந்துசெல்லக்கூடியதாக இருக்கும்.

### ஞானமாக நண்பர்களைத் தெரிவுசெய்யுங்கள்.

நான் வளரும்போது, வாழ்க்கையில் மிகவும் சிறப்பாக இருக்கவேண்டுமானால், சிறப்பான நண்பர் களைச் சார்ந்திருக்கவேண்டும் என்பதைக் கண்டு கொண்டேன். ஆகவே இக்கட்டுரையின் ஊடாக, சிறந்த நண்பர்களை வைத்திருப்பதற்கு தேவையான நட்பின் நான்கு முக்கிய படிக்கற்களைக் குறித்து உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன்.

முதலாவது நான் கூறவிரும்பும் காரியமா னது, சிறந்த நண்பர்களைக் கொண்டிருக்கவேண்டு மானால், சிறப்பான நண்பராக நீ மாறவேண்டும். வேதாகமம் கூறுகின்றபடி, நீதிமொழிகள் 18:24: "சிநேகிதருள்ளவன் சிநேகம் பாராட்டவேண்டும்; சகோதரனிலும் அதிக சொந்தமாய்ச் சிநேகிப்பவனு முண்டு." ஆகவே, இந்த அளவுகோலின் அடிப்படை யில் உங்கள் நண்பர்களை நோக்கிப் பார்க்கும் அதேவேளையில், அவர்களுக்கு நீங்கள் யார் என்பதைக் குறித்தும் நினைவில் வைத்திருங்கள்.

### நல்ல நண்பர்கள் எல்லா நேரத்திலும் நேசிப்பார்கள்.

பேதுரு 4:8ம் வசனம் இவ்வாறு கூறுகின்றது: "எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவரிலொருவர் ஊக்க மான அன்புள்ளவர்களாயிருங்கள்; அன்பு திரளான பாவங்களை மூடும்." ஒருவர் செய்கின்ற காரியத்தை வைத்து அவர் உங்களுடன் நண்பராகவோ உங்களை நேசிக்கவோ முடியாது. நண்பர் இல்லாத நேரத்திலும் அவரை நேசிக்கக்கூடியவராகவே நல்ல நண்பர்கள் இருப்பார்கள். சூழ்நிலைகள் எவ்வாறாக இருந்தபோதிலும் உண்மையான நண்பர்கள் எப்பொழுதும் எல்லா நேரத்திலும் நேசிக்கக்கூடிய வர்களாகவே இருப்பார்கள்.



**நல்ல நண்பர்கள் எப்பொழுதும் உற்சாகப்படுத்துவார்கள்.**

ஒருசிலருக்கு எதிலாகிலும் அதிஷ்டம் அடித்தவுடன் அவர்களைச் சூழ அநேக "நண்பர்கள்" மொய்த்து விடுவார்கள். அதற்கு முன்னர் அவர்கள் நண்பர்களாக பழகியிருந்திருக்கவே மாட்டார்கள். இதனைத்தான் நீதிமொழிகள் 19:6ம் வசனம் கூறுகின்றது. "பிரபுவின் தயையை அநேகர் வருந்திக் கேட்பார்கள்; கொடைகொடுக்கிறவனுக்கு எவனும் சிநேகிதன்". எனினும் நல்ல நண்பர்கள் தங்கள் நண்பர்களால் இலாபம் அடையலாம் என்ற நோக்கத்துடன் பழகமாட்டார்கள். அவர்கள் உங்களுடைய நட்பினை எதிர்பார்ப்பதற்குக் காரணம், ஏதேனும் இலாபம் பெறும் நோக்கமாக இருக்குமாயின், அல்லது ஏதேனும் தீய நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக இருக்குமாயின் அவர்கள் ஒருபோதும் நல்ல நண்பர்களாக இருக்கமுடியாது. ஆகவே, உங்கள் நட்பினைப் பெறுவதற்காக பிறர் காத்திருக்கும்படி நடந்துகொள்ளாமல், நட்பு தேவைப்படும் ஒரு சிலரை உங்களுடைய சிறந்த நண்பர்களாகத் தெரிந்தெடுத்துக்கொள்ளுங்கள். ஏதேனும் ஒரு வழிமுறையில் அவர்களுக்குச் சேவைசெய்ய முற்படுங்கள். சுயநலத்துடனான வாஞ்சையிலும் பேராசையிலும் பார்க்க, சுயநலமற்ற சேவை மனப்பான்மையுள்ளவராக மற்றவர்களால் நல்ல நண்பராக தேர்ந்தெடுக்கப்படத்தக்கவராக உங்களை மாற்றிக்கொள்ளுங்கள்.

**நல்ல நண்பர்கள் நேர்மையுள்ளவர்களாக இருப்பார்கள்.**

நீதிமொழிகள் 27:6 கூறுகின்றது, "சிநேகிதன் அடிக்கும் அடிகள் உண்மையானவைகள்." ஒரு சிறந்த நண்பனாக இருக்க விரும்புபவன் தன்னுடைய சிநேகிதனுடைய வாழ்க்கையில் தேவையில்லாமல் தலையிடமாட்டான். நண்பத்துவத்தின் சிறந்ததன்மையானது ஒருவருக்கொருவர் நேர்மையுள்ளவர்களாக இருப்பதேயாகும். இதைச்செய்வதற்கு உரிய எல்லா முயற்சிகளையும் எடுப்பவனே சிறந்த நண்பனாக இருக்கமுடியும். ஒரு தலைசிறந்த மருத்துவர் தனது நோயாளியைக் குணமாக்கும்படியாக வருத்தம் தந்தாலும் உரிய மருத்துவச் சிகிச்சையை செய்வார். அவ்வாறே சிறந்த நண்பரும் தன்னுடைய நண்பரின் நலனுக்காக வேதனையான அணுகுமுறையையும் கையாளுவார்.

**நல்ல நண்பர்கள் சிறப்பானதை நம்புவார்கள்.**

உங்கள் நண்பர்களைக்குறித்து எதிர்மறையான தீயக் காரியத்தை நீங்கள் கேள்விப்படுவீர்களாயின், நீங்கள் சொல்லவேண்டிய முதலாவது காரியம், "அது உண்மையாக இருக்க முடியாது" என்பதே. உண்மை இன்னதென்பதை அறியும்வரை நல்ல நண்பன் ஒருபோதும் தீய எதிர்மறையான காரியத்தை நம்பப்போவதில்லை. 1கொரிந்தியர் 13:6ம் வசனம் கூறுகின்றது, "அன்பு அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும்."



## நல்ல நண்பர்களை தெரிந்தெடு.

இக் கட்டுரையை வாசிக்கும் உங்களுக்கு அநேக சிறந்த நல்ல நண்பர்கள் இல்லாவிட்டாலும், இன்றே உங்களுக்கென நண்பர்களைச் சம்பாதிக்க ஆரம்பியுங்கள்! நீங்கள் அறிந்துள்ள நபர்களைக் குறித்து சிந்தியுங்கள். அவர்களில் யாருடனாவது நீங்கள் நண்பர்களாக இருக்கக்கூடுமா? அவர்களை போய்ச் சந்தியுங்கள். இதைச் செய்யும்போது, சகோதரனைக் காட்டிலும் நெருக்கமாக உங்களைச் சிநேகிப்பவர்களை நீங்கள் கண்டுகொள்வீர்கள். உங்கள் நட்பு வட்டத்தைச் சுருக்காதீர்கள்.

நீங்கள் பற்றிப் பிடித்திருக்கத்தக்க நல்ல நண்பர் இயேசு ஒருவரே. சிறந்த நட்புக்கான முன் உதாரணம் அவர் ஒருவரே. அந்தமேலான நட்பினை நீங்களும் மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள். ❑

# கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டினவன்



- சுவிசேஷகர் சுசி பிரபாகரதாஸ் -

நாம் அடிக்கடி மத்தேயு 7:24 முதல் 29 வரையிலான வேதப் பகுதியைப் படித்திருக்கிறோம். நம்முடைய ஆண்டவராகிய இயேசுவானவர் அருளிய மலைப்பிரசங்கம் கிறிஸ்தவ மார்க்கத்தின் நடுமைய மாகும். இயேசுகிறிஸ்து தமது மலைப்பிரசங்கத்தின் உச்சக்கட்ட போதனையின் இறுதியிலே இந்த உவமை யைக் கூறுகின்றார். இரண்டு பேர் வீடு கட்டுகிறார்கள். ஒருவன் கன்மலையின்மேல் கட்டுகின்றான். ஒருவன் மணலின்மேல் கட்டுகின்றான். இரண்டு பேருடைய வீடும் எழும்புகின்றன. இரண்டு பேருடைய வீடும் முடிவுற்றன. ஒருநாள் பெருமழை பெய்தது, காற்று அடித்தது. பெருங்காற்று அடித்து வீடுகள் மீது மோதியது. “மணலின் மேல் கட்டின வீடு விழுந்தது, விழுந்து முழுவதும் அழிந்தது” என்று தெளிவாக வேதாகமம் சொல்லுகின்றது. ஆனால் கன்மலையின் மேல் கட்டின வீடு நிலைத்திருந்தது.

ஆண்டவர் இந்த உவமையை எந்த சூழ்நிலை யில் சொன்னார் என்றால் மலைப்பிரசங்கத்தை இரண்டு தரப்பினர் கேட்கின்றனர். ஒருசாரார் ஆண்டவரின் சீஷர்கள், இன்னொருசாரார் பொதுமக்கள் அல்லது ஆண்டவரின் செய்தியைக் கேட்க வாஞ்சித்து வந்தவர்கள், வசனத்தை கேட்கிறவர்கள், வசனத்தின் படி செய்கிறவர்கள் ஆகியோரைப் பற்றி விளக்கும் படியாக இங்கே ஆண்டவர் இந்த உவமையைச் சொன்னார். இன்று செய்தியைக் கேட்கிறவர்கள் ஏராளம். அதாவது, தேவராஜ்யத்தின் உண்மையைக் கேட்கிறவர்கள் ஏராளம். ஆனால் அதன்படி செய்கிற வர்களோ வெகு சிலர் ஆவர். வசனத்தை கேட்கிறதின் படி செய்கிறவர்கள்தான் ஆண்டவருடைய பிள்ளைகள் என்று உணர்த்துவதற்காகவே இந்த உவமையை இயேசு கூறினார்.

அருமையானவர்களே, மணலின்மேல் கட்டும் வீட்டிற்கும், கன்மலையின்மேல் கட்டுகின்ற வீட்டிற்கும் பலத்த வித்தியாசம் இருக்கிறது. மணலின்மேல் வீடு கட்டுவது எளிது, கன்மலையின்மேல் பாறையான இடத்தில் வீடுகட்டுவது கடினம். வெகு சொற்ப காலத்தில் மணலின்மேல் வீட்டைக் கட்டிவிடலாம். பாறையான இடத்தில் ஒரு வீட்டைக் கட்டுவதற்கு அநேக நாட்கள் ஆகும்.

மணலின்மேல் வீடு கட்டுவதற்கு நாம் விலைக் கிரயம் கொடுக்கவேண்டாம். ஆனால் பாறையின்மேல் வீடு கட்டுவதற்கு அதிக விலைக்கிரயம் கொடுக்க வேண்டும். அதிக சங்கடங்களை அனுபவிக்கவேண்டி இருந்திருக்கும். இரண்டுபேருடைய வீடும் கட்டிமுடிக்கப் பட்டபோது வெளித்தோற்றத்திலே ஒரேவிதமாகவே இருந்தது. கட்டினவர்களுக்கு மட்டுமே தங்களுடைய வீடு எதன்மேல் கட்டப்பட்டது என்பது தெரியும்.

இரண்டு பேருமே கட்டின வீட்டின் பலத்தையும், தன்மையையும் சோதிக்கிறதற்காக அங்கு ஒரு பெருங் காற்று வீசுகின்றது. பெருமழையும் பெய்கின்றது. அப்பொழுது மணலின்மேல் கட்டின வீடு விழுந்து, முழுவதும் அழிந்துபோனது. அந்த வீடு இருந்ததற்கான அடையாளமே இல்லாமல் போய்விட்டது. ஆண்டவர், “என் வார்த்தைகளைக் கேட்டு இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனே கன்மலையின்மேல் கட்டின புத்தியுள்ள மனிதன்” என்பதை இந்த உவமை யிலிருந்து எடுத்துச் சொல்லுகிறார். ஆண்டவர்மேல், ஆண்டவருடைய வசனத்தின்மேல் யார் வீட்டைக் கட்டுகின்றார்களோ அவர்கள்தான் கன்மலையின்மேல் வீட்டைக் கட்டுகிறவர்களாக இருப்பார்கள்.

கன்மலையின்மேல் வீட்டைக் கட்டுகிறதும், மணலின்மேல் வீட்டைக் கட்டுகிறதும் வெளித் தோற்றத்திலே ஒன்றாக இருந்தாலும், அதினுடைய அஸ்திபாரத்தில் வித்தியாசம் இருக்கிறது. ஆண்டவரு டைய வசனத்தைக் கேட்கிறவர்களும், செய்கிறவர்

களும் வெளிப்பார்வைக்கு ஒரேவிதமாக இருந்தாலும், சோதனை வரும்போதுதான், உபத்திரவம் வரும்போது தான், பாடுகள் வரும்போதுதான், வியாதிகள்வரும் போதுதான், நிந்தைகள் வரும்போதுதான் கன்மலை யின்மேல் கட்டப்பட்ட வீடு நிலைத்ததுபோல ஆண்டவர் மேலேயும், அவரது வசனத்தின்மேலேயும் கட்டப்பட்ட வனே நிலைத்திருப்பான். அனுபவங்கள் மாறிவிடும். ஊழியர்கள் மாறிவிடுவார்கள். வரங்கள் கூட குறைவு பட்டதுதான், மாறிவிடலாம். ஆனால், கிறிஸ்துவின் மேலும், கிறிஸ்துவின் வசனத்தின்மேலும் யார் தன் ஆன்மீக வாழ்வைக் கட்டுகிறானோ, அவனுக்கு எவ்வளவு பெரிய சோதனைகளும் நெருக்கங்களும் வந்தாலும் அவன் நிலைத்திருப்பான்.

ஆண்டவராகிய இயேசுவானவர் பேதுருவைப் பார்த்து, "நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்த கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்" என்றார். அப்படி யென்றால் இந்தக் கல் என்பதின் பொருள் என்ன? "மனுஷகுமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகின்றார்கள்" என்று மத்தேயு 16:13 இல் இயேசு சீஷர்களிடம் கேட்டபோது, 16வசனத்தில் "சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக: நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்று சொன்னார். இந்த விசுவாச அறிக்கையின் மேலே சபையைக் கட்டுவேன் என்று இயேசு சொன்னார். பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்ளாது என்றும் சொன்னார்.

அப்படியானால் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவின்மேல் தங்களது ஆவிக்குரிய வாழ்வைக் கட்டுகிறவர்கள் வாழ்க்கையிலே சோதனை வந்தாலும் அது அவர்களை அணுகாது. அவ்வாறு அணுகினாலும் அவைகள் அவர்களைச் சேதப்படுத்த முடியாது. அச்சோதனைகளிலே அவர்கள் அழிந்து போகமாட்டார்கள். நிலைத்திருப்பார்கள்.

அருமையானவர்களே! கர்த்தருடைய வார்த்தையைக் கேட்கிறோமா? வார்த்தையைக் கேட்கிற அளவுக்கு நாம் அதை நடைமுறைப்படுத்துகிறோமா? வசனத்தை கேட்கிற அளவுக்கு நம் உறவுகளிலே, பண விஷயத்திலே, ஒழுக்கநெறிகளிலே, நம்முடைய நேரத்தை கையாளுகிறதிலே வசனத்திற்கு எவ்வளவு முக்கியத்துவம் தருகிறோம்?

வேதாகமம் தெளிவாகச் சொல்லுகின்றது: "ஆண்டவர்மேலும், ஆண்டவருடைய வார்த்தையின் மேலும் தன் வாழ்க்கையை கட்டினவன் கன்மலையின் மேல் தன் வீட்டைக் கட்டினவனுக்கு ஒப்பாயிருக்கி றான்" என்று. ஆண்டவர்மேலும் அவருடைய வார்த்தை யின் மேலும் கட்டாதவனுடைய வீடு அழிந்துவிடும். அவன் புத்தியற்றவன் என்று வேதம் சொல்லுகின்றது. அருமையான தேவபிள்ளையே, நீங்கள் புத்தியுள்ளவர் களா? புத்தியற்றவர்களா? நீங்கள் கேட்கிறவர்களா? அல்லது கேட்கிறதன்படிச் செய்கிறவர்களா? நாம் வசனத்தைக் கேட்டு அதின்படி செய்கிறவர்களைப் போல மாற வேண்டும் என்றே இயேசு விரும்புகின்றார்.

கர்த்தருடைய வார்த்தையைக் கேட்போம். செயல்முறைப்படுத்துவோம். கீழ்ப்படிவோம். வாழ்வில் அதை நடைமுறைப்படுத்துவோம். ஆண்டவரின்மேலும் அவருடைய வசனத்தின்மேலும் நம்முடைய வாழ்வைக் கட்டுவோம். கர்த்தர் நம்மை ஒருநாளும் கைவிட மாட்டார். என்ன சூழ்நிலை வந்தாலும் அவருக்குள் நாம் நிலைத்திருப்போம்.

❑


**இதோ! உங்களுக்கு ஒரு அரிய சந்தர்ப்பம்**

**உங்களிடம் சிறந்த குரல்வளம் உண்டா? உங்கள் திறமைகளையும் தாலந்துகளையும் தேவனுடைய சேவையில் பயன்படுத்த விரும்புகின்றீர்களா?**

**உலகெங்கும் ஒலிபரப்பாகும் எமது வானொலி நிகழ்ச்சிகளில் இணைந்துகொண்டு நாடகங்களில் நடிக்க, நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்க விரும்புகின்றீர்களா? எம்முடன் 31.10.2011ம் திகதிக்கு முன் தொடர்புகொள்ளுங்கள்.**



மேலதிக விபரங்களுக்கு :
குரல் தேர்வு
சத்தியவசனம் வானொலி நிகழ்ச்சிகள்
தபால் பெட்டி இல : 1012,
கொழும்பு

☎ : 011 - 2695441 அல்லது 071 - 4868318

மின்னஞ்சல் : ravi@backtothebible.lk



# சிங்கமும் ஆட்டுக்குட்டியும்

- சாந்தி பொன்னு -

சிங்கமும் ஆட்டுக்குட்டியும் ஒன்றாயிருக்குமா? முடியவே முடியாது. ஆனால், ஒரு மனுஷனால் சிங்கமுமாய் ஆட்டுக்குட்டியுமாய் இருக்கமுடியும். எப்படி என்று பார்ப்போமா!

**பழைய ஏற்பாட்டில் சிங்கமும் ஆட்டுக்குட்டியும்:**

பழைய ஏற்பாட்டில் ஈசாக்கின் வாழ்க்கை பல வழிகளிலே நமக்கு இயேசுகிறிஸ்துவைப் பிரதிபலிக்கிறது என்பதை நாம் அறிவோம். கர்த்தர் சொன்னதை நிறைவேற்றும்படி கனத்த இருதயத்தோடு ஆபிரகாம் மோரியா மலைக்குச் சென்றபோது, 'பலிக்கு ஆடு எங்கே அப்பா' என்று மகன் கேட்க, 'நீதானடா அந்த ஆடு' என்று சொல்லமுடியாமல் ஆபிரகாம் திண்டாடியதும், தேவன் பார்த்துக்கொள்வார் என்று பதில் சொன்னதும் நாம் அறிந்ததே. ஈசாக்கை அவர் கட்டி பலிமேடையில் கிடத்தியபோது ஈசாக்கு வாய் பேசாமல் அமைதியாக ஒரு ஆட்டுக்குட்டியைப்போல கிடந்தாரே. அந்த ஈசாக்குக்குள் ஒரு சிங்கம் இருந்தது என்பதையும் நாம் சிந்திக்கவேண்டும். அவர் ஒரே மகன், வாக்குத்தத்தத்தின் மகன், ஆபிரகாமின் சொத்துக்களுக்கு ஒரே வாரிசு. மாத்திரமல்ல, ஆபிரகாமுடன் தேவன் செய்த உடன்படிக்கைக்குச் சுதந்தரவாளி. ஆகவே ஈசாக்கு வீறுகொண்டு எழுந்து, தகப்பனைக் கேள்விக்கு மேல் கேள்வி கேட்டிருக்கலாம். தனது சம்மதம் இன்றி இந்தப் பலியை எப்படிச் செலுத்தலாம் என்று சத்தம் போட்டிருக்கலாம். ஆனால், ஈசாக்கு தனக்குள் இருந்த சிங்கத்தை அமைதிப்படுத்தி, அந்தப் பலிமேடையில் கட்டப்பட்டுக் கிடந்தார். இந்தக் காரியம் கிறிஸ்துவை நமக்கு வெளிப்படுத்துகிறதல்லவா!

ஆனால், இஸ்ரவேலுடைய காரியமோ வித்தியாசமானது. தமக்குள் இருக்கும் சிங்கத்தைத் தட்டி எழுப்பி வீறுநடை போட்டு வெற்றி சிறக்கவேண்டிய தருணம் இஸ்ரவேலுக்கு அளிக்கப்பட்டிருந்தும் அவர்கள் அதில் தவறிவிட்டார்கள். ஒருபோதும் நடக்காத வழியிலே, தேவன் அவர்களை அற்புதமாக நடத்தினார். அவர்களோ அடிக்கடி தேவனைவிட்டு விலகினார்கள். ஆனாலும், பிற மக்கள் அவர்களைக் கண்டு பயப்படுமளவுக்கு தேவன் அவர்களை வழி நடத்தினார். ஒரு சேனை வருகிறது என்று வழிவிட்டவர்கள் பலர்; கண்டு நடுங்கி இங்கே வரவேண்டாம் என்று வழிகளை அடைத்துப்போட்டவர்களும் பலர். ஆனால் இஸ்ரவேலர் தாம் யார், தமக்குள் இருப்பவர் யார், தமக்குரிய பெலம் என்ன என்பதையெல்லாம் நினைத்து பார்த்ததே இல்லை என்பதுதான் உண்மை. இல்லையானால், அடிக்கடி தமக்குள் இருக்கும் பெலத்தை மறந்து, அந்நியரையும், இராணுவத்தையும் குதிரை வீரரையும் நாடியிருப்பார்களா? தமக்குள் இருக்கும் சிங்கத்தை அவர்கள் மறந்துபோனார்கள். இல்லையானால், யார் முன்னிலையில் எதிர்த்து நிற்க வேண்டும், யார் முன்னிலையில் அமைதி காக்க வேண்டும் என்பதை சிந்தியாதிருந்திருப்பார்களா? புற இனத்தார் முன்னிலையிலும், பிற அரசர்கள் முன்னிலையிலும் ஒரு ஆட்டுக்குட்டியைப்போல தலைகுனிந்து நின்றிருப்பார்களா? அவர்களது கானான் பயணத்திலும், கானானில் வாழும்போதும் அவர்களது வாழ்வில் பல தோல்விகள் ஏற்பட இதுவும் முக்கியமான ஒரு காரணமாக இருந்தது.

இன்று நமது காரியமும் இந்த இஸ்ரவேலரைப் போன்றதுதான். நமக்குள் இருப்பவர் யார்? நமக்கு இருக்கும் பெலம் என்ன? யார் முன்னிலையில் எப்படி நிற்கவேண்டும்? விலகிநிற்கவேண்டிய இடம் எது? எதிர்த்துநிற்க வேண்டிய இடம் எது? இவற்றைக்குறித்து நாம் அதிகம் அலட்டிக் கொள்வதில்லை. ஏதோ அந்தந்த நேரம் மனதில் எழுகின்ற எண்ணங்களுக்கு அடிமைகளாகிக் கிடப்பதால்தான் வாழ்வில் தேவனுக்காக பெரிய காரியங்களை நம்மால் செய்யமுடிவதில்லை. கடந்தவருடங்களில் நாம் சந்தித்த தோல்விகளுக்கெல்லாம் அடிப்படையான காரணங்கள் பல இருக்கலாம். ஆனால் இது ஒரு முக்கிய காரணம் என்றால் மிகையாகாது.

**இரு வேறு மாறுபட்ட குணாதிசயங்கள்:**

என் பெலத்திற்கு முன்னால் நிற்கக்கூடியவன் யார் என்று தலையைத் துலுக்கி கர்ச்சித்து சவாலிட்ட தாம் ஒரு பெரிய சிங்கம். காடே அதிர்ந்தது. ஏற்கனவே ஒரு துஷ்ட புலி அந்த மிருகங்களைப் பயமுறுத்திக் கொண்டிருக்க, இப்போது ஒரு புதிய பிரச்சினை இந்த மிருகங்களுக்கு. அவை திகிலடைந்து ஒன்றையொன்று விழித்துக்கொண்டன. அப்போது ஒரு சின்ன ஆட்டுக் குட்டி மெதுமெதுவாக முன்னே வந்தது. எல்லா மிருகங்களும் ஏகமாய், 'ஊ....ஊ' என்று சத்தமிட்டன. இந்தக் குட்டியால் இன்று எல்லா மிருகங்களுக்கும் ஆபத்து என்று முறுமுறுத்தன. இந்த ஆட்டுக்குட்டியைப் பார்த்து ஆத்திரமடையவேண்டிய சிங்கம், 'ஏய், சின்னக் குட்டியே, நீயா?' என்று கேலியாகச் சிரித்தது. 'ஆமா, நான்தான். உனக்கு ஒன்று தெரியுமா? நானும் நீயும் ஒன்றுதான்' என்றது குட்டி. சிங்கத்திற்கு ஆச்சரியம். 'என்ன சொல்கிறாய்?' என்று கேட்டது. 'நீ அடக்குவதில் வீரன். நான் அடங்கி நிற்பதில் வீரன். என்னைப்போல அடங்கி நிற்க உன்னால் முடியுமா?' என சவால்விட்டது குட்டி. சிங்கம் திகைத்தது, யோசித்தது. ஆட்டுக்குட்டி தொடர்ந்தது. 'நானும் நீயும் ஒன்றாயிருந்தால் அந்த துஷ்ட புலியிடமிருந்து இந்த முழுக்காட்டையும் நாம் பாதுகாக்கலாமே. நீயே ராஜாவாய் கெம்பீரமாய் நிற்கலாமே' என்றது. சிங்கம் ஆம் என்பதுபோல தலை அசைத்தது. எல்லா மிருகங்களும் மிக்க மகிழ்ச்சி யோடே ஆரவாரம் செய்தன.

இது ஒரு உருவகக் கதைதான். ஆனால், இதற்குள்ளும் ஒரு உண்மை உண்டு. மனித வழக்கத்தில் நாம் சித்தரிக்கும் சிங்கம் வேறு, வேதாகமத்து சிங்கம் - யூதா கோத்திரத்து சிங்கம் என்று சிங்கம் சித்தரிக்கப்பட்டிருக்கும் விதம் வேறு. உலக வழக்கப் படியான சிங்கம்தான் நமது வாழ்வில் அடிக்கடி வெளிப் படுகிறதை நாம் மறுக்கமுடியாது. அந்த மமதையான குணம் வெளிப்படும் போதேல்லாம் ஒரு ஆட்டுக்குட்டி தான் நம்மைக் காப்பாற்றுகிறது என்பதை நாம் உணர்ந் ததுண்டா? தேவசாயலில் படைக்கப்பட்ட மனிதன் மமதைகொண்டு தானே தனக்கு கடவுளாக மாற விரும்பி அழிவைத் தேடிக்கொண்டபோது, கடவுளே மனிதனாய், தேவாட்டுக்குட்டியாய் நின்று நம்மைக் காப்பாற்றினாரே. நமது நாளாந்த வாழ்விலும், நாம் மமதைகொண்டு அகங்காரம்கொண்டு நமக்கு நாமே ஆபத்துக்களைச் சம்பாதிக்கும்போது, எவரோ ஒருவர் வந்து நம்மைக் காப்பாற்றிய சம்பவங்களை நினைவு படுத்திக்கொள்வோம்.

தேவன் நம்மைத் தமது சாயலில் படைத்தார் என்றால் அவருடைய குணாதிசயம், அவருடைய பரிசுத்தம், நீதி, அன்பு, வல்லமை, அதிகாரம் யாவும் நமக்குள் வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், நாமோ அத்தனையையும் மறந்து, பாவத்திற்கு நம்மை விற்றுப் போட்டதால், நமக்குள் இருக்கும் விலைமதிக்கமுடியாத அதிகாரத்தையும் இழந்துபோனோம். இதனாலேதான் நமது வாழ்வில் தோல்விகள், விழுகைகள். கடந்த காலங்களைத் திரும்பிப் பார்த்து, எங்கே நாம் தவறு விட்டோம் என்பதை உண்மையான மனதோடு சிந்திப் போமானால், அந்த உண்மை விளங்கும்.

'நீதிமான்களோ சிங்கத்தைப்போல தைரியமா யிருக்கிறார்கள்' (நீதிமொழிகள் 28:1) அதாவது, என்ன நேர்ந்தாலும் என்ன இக்கட்டுகள் வந்தாலும் நீதிமான்

## அன்பினைப் பொழிந்திடுவார்!



திக்குவாயன் என்று திகைத்து நின்ற மோசேயை
திக்கு வழிகாட்டியாய் திண்ணமாய் துயர்கள் போக்கியே
அக்கரைக்கு தம் ஜனத்தை அன்புடன் அழைத்திட்டவர்
அரவணைத்து நடத்திடுவார் ஆறுதல் தந்திடுவார்!

யாப்போக்கு நதிக்கரையில் யாருமில்லா வேளையிலே
யாக்கோபை பெலனளித்து ஜீவனுடன் ஜெயிக்கவைத்த
யெகோவா நிசியாம் ஜெயம்தரும் தேவனவர்
யெஷுரனே என்றழைத்து அன்பினைப் பொழிந்திடுவார்!

குழியினிலே வீசப்பட்ட கனிதரும் யோசேப்பை
குன்றுவரை குறைவின்றி உயர்த்தி நின்றநேசரவர்
குவலயத்தில் குருவாய் வந்து கூடவே கருணைகூர்ந்து
குறைவின்றி நிறைவாக நித்தமும் நடத்திடுவார்!

ஆடுகளின் பின்னே அலைந்துதிரிந்த தாவீதை
நாடுபோற்றும் யுத்தவீர நல்லரசனாக்கியே
நலமுடன் ஆண்டிட நல்லாசி நல்கியவர்
நன்மையாலும் கிருபையாலும் நன்றே முடிசூட்டிடுவார்!

(எஸ். தர்மகுலசிங்கம்)

ஒரு சிங்கத்தைப்போல நிமிர்ந்தே நிற்பான். அப்படியா நமது வாழ்வு இருக்கிறது? நீதிமான்களைக் குறித்து அநேக வாக்குறுதிகளைத் தேவன் வேதத்தில் தந்திருக் கிறார். யார் இந்த நீதிமான்? நீதி செய்து நீதிமான்கள் என்று பெயர்பெற ஒரு மனுபுத்திரனும் தகுதியுள்ளவன் இல்லை. அப்போ யார் இவன்? ஆம், இயேசுகிறிஸ்து வின் இரத்தத்தினாலே நாம் மீட்கப்படும்போது, நமது சுயநீதிகள் யாவும் அழிந்து, தேவநீதி நம்மை ஆட்கொள்கிறது. இப்போ தேவன் நம்மை நேரிடையாக அல்ல; கிறிஸ்துவுக்கூடாகவே காண்கிறார். அதாவது கிறிஸ்துவின் நீதி நம்மை மூடிக்கொள்கிறது. நமது பாவ நிலைமைகள் கிறிஸ்துவின் இரத்தத்தில் கரைந்து போகிறது. இதுவே நமது விசுவாசம். அந்த திவ்ய விசுவாசத்தில் நிலைத்திருக்கும் நம்மை தேவன் கிறிஸ்துவினிமித்தம் நீதிமான்களாகவே காண்கிறார்.

இது புதிய ஏற்பாட்டின் சத்தியம். ஆனால், பழைய ஏற்பாட்டிலே நீதிமான் என்பதன் எபிரேய பதம், ஒருவன் கடவுளுக்குச் சரி என்றிருப்பதைச் செய்கிறவன், கடவுளுக்குச் சரியில்லை என்றிருப்பதைச் செய்யாதிருப் பவன் என்ற நேரிடையான கருத்தைக் கொண்டிருக்கி றது. கடவுள் நோவாவை, யோபுவை நீதிமான்களாகக் கண்டபோது, அப்போது கிறிஸ்துவின் இரத்தம் இருக்க வில்லை. அவர்களை தேவனின் நீதியுள்ள வழியிலே வாழுகிறவர்களாகவே தேவன் கண்டார். இவ்விடத்திலே தான் பெரியதொரு சவால் வருகிறது? தேவனுடைய நீதி வெளிப்படவேண்டுமானால் நான் எவ்விடத்திலே சிங்கமாய் நிற்கவேண்டும்? எவ்விடத்திலே ஆடாய் நிற்க வேண்டும்? நோவாவும் யோபுவும் இதில் வெற்றிகண்ட மனுஷர். ஆனால் இன்று நமது நிலைமை என்ன?

இன்று தேவகிருபையாலே நீதிமான்களாக்கப் பட்ட நாம் கோழைகளாக வாழலாமா? நம் வாழ்வில் தோல்விகளைத் தழுவலாமா? விழுந்து விழுந்து...... ஏன் இன்னமும் தடுமாற்றமான வாழ்க்கை? ஈசாக்கைப் போல நடவாமல், அன்றைய இஸ்ரவேலர்போல தேவனைத் துக்கப்படுத்தலாமா? இனியும் அது கூடாது. அதற்கு ஒரே வழி, நாம் யார்? நாம் எந்த இடத்தில் எப்படி நிற்கவேண்டும் என்பதைப் புரிந்துவாழ வேண்டி யதுதான். சிங்கம் காட்டு ராஜாதான். அது நோயுற்று, பெலனற்றுப் போனால், கிழட்டுச்சிங்கம் ஆகிவிட்டால் யார் அதற்குப் பயப்படுவர்? ஆட்டுக்குட்டி சாதுவானது தான். ஆனால் அது தன்னிலை மறந்து தன்னிச்சையாக நடக்க முற்பட்டால் அதன் முடிவும் பரிதாபம்தான்.

### வேதாகமத்துச் சிங்கமும் ஆட்டுக்குட்டியும்:

பத்மு தீவிலே யோவான் கண்ட தரிசனங்களில் ஒரு முக்கிய காட்சி வெளிப்படுத்தல் 5ம் அதிகாரத்தில் அழகாகச் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. உள்ளும் புறம்பும் எழுதப்பட்டு, ஏழு முத்திரைகளால் முத்திரிக்கப்பட்ட ஒரு புஸ்தகச் சுருள் சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பவரு டைய வலதுகரத்தில் இருப்பதை யோவான் கண்டார். இந்த முத்திரைகளை உடைக்கவும் இதைத் திறக்கவும் பாத்திரன் யார் என்று ஒரு தூதன் சத்தமிட்டுக் கூவி அழைக்கிறான். வானத்திலாவது பூமியிலாவது பூமியின் கீழாவது ஒருவனும் அந்தப் புஸ்தகத்தைத் திறக்கவும் பார்க்கவும் கூடாதிருந்தது. இதனால் யோவான் மிகவும் அழுதாராம். ஏன் எவரும் அதைத் திறக்க முன்வர வில்லை. ஏனெனில், அது முத்திரிக்கப்பட்ட புஸ்தகம். ஆகவே அதிகாரமுள்ள ஒருவராய் மாத்திரமல்ல, அதற்கான விலைக்கிரயத்தையும் செலுத்த வல்லவ ரான ஒருவரே அதனை உடைத்துத் திறக்கப் பாத்திரர். அந்த இரண்டு மாறுபட்ட தன்மையையும் ஒருங்கே கொண்ட பரிசுத்தர் யார்? வானத்துத் தேவதூதர் அதில் அடங்கார். பூமியிலுள்ள அனைவரும் பாவம்செய்து தேவ மகிமையை இழந்துபோனவர்கள், அவர்களும் உள்ளடங்கார். அப்படியானால் யார் தகுதிபெற்றவன்?

ரூத்தின் சம்பவம் நல்லதொரு எடுத்துக்காட்டு. எலிமலேக்கின் நிலத்தை நகோமியிடமிருந்து வாங்கு கிறதற்குத் தகுதியுள்ள சுதந்திரவாளி தேவைப்பட்டான். பழைய ஏற்பாட்டு பிரமாணத்தின்படி அந்த நிலத்தைக் கொள்கிறவன், நிலத்தோடு ரூத்தின் பொறுப்பையும் எடுக்கவேண்டியதாயிருந்தது. உண்மையான உடனடி யான சுதந்தரவாளி நிலத்தை வாங்க முதலில் சம்மதித் தாலும் ரூத்தின் சங்கதி அறிந்ததும் பின்வாங்கிவிட்டான். அப்போதுதான் போவாஸ் எழுந்தான். அவன் அன்று அந்நிலையில் உலகவழக்க சிங்கத்தைப்போல சீறியி ருக்கலாம். ஒரு விதவை, ஒரு புறவினத்தாள் இவளுக் காக என் தன்மானத்தை விட்டுக்கொடுக்கலாமா என்று கொதித்திருக்கலாம். பின்வாங்கிய சுதந்தரவாளியை வலுக்கட்டாயமாக இந்த இடத்தில் நிறுத்தியிருக்கலாம். ஆனால், போவாஸ் சீறும் சிங்கமாய் அல்ல, அவர் ஒரு ஆட்டுக்குட்டியைப்போல முன்வந்து அந்த நிலத்தையும் மீட்டு, ரூத்தையும் தன் மனைவியாக்கிக் கொண்டான். இதனால், இரு காரியங்கள் நிகழ்ந்தன. ஒன்று மேசியா வின் வம்சத்திலே இந்த போவாஸ் இடம்பெற்றான். அடுத்தது, இவன் செய்த இந்த நற்காரியத்தால், புதிய ஏற்பாட்டிலே புறவினத்தாருக்கும் வரவிருந்த இரட்சிப்பின் முன்னோடியாக புறவினத்தாளாகிய ரூத்தும் இந்த வம்ச வரலாற்றிலே சேர்க்கப்பட்டாள். ஆட்டுக்குட்டியாக நிற்க வேண்டிய இடத்திலே போவாஸ் ஆட்டுக்குட்டியாகவே நின்றிருந்தான்.

இப்படியாக தன் மேன்மை கருதாது, தள்ளப் பட்டவர்கள் விதவைகள் பாவிகள் என்று பாராமல், ஏற்ற விலைக்கிரயம் செலுத்தி, மனுக்குலத்தையே தம்மோடு சேர்த்துக்கொள்ளக்கூடிய ஒருவர்தான் சிங்காசனத்தில் இருக்கிறவருடைய கைகளில் இருக்கும் உரிமைப் பத்திரத்தை உடைத்துத் திறக்கப் பாத்திரர். அவர் யார்? இதற்குரிய விலைக்கிரயம் சாதாரணமானது அல்ல. வெறும் காசு பணமும் அல்ல. முழு மனுக்குலமும் தேவனிடமிருந்து பிரிந்துபோகக் காரணமான அந்தப் பாவத்திற்கு எதிரான விலைக்கிரயம் அது. அதை யார் செலுத்துவார்? இதற்காகத்தான் யோவான் அழுதார்.

அப்பொழுது மூப்பர்களில் ஒருவன், நீ அழ வேண்டாம். இதோ யூதா கோத்திரத்துச் சிங்கம், அவரே

புஸ்தகத்தைத் திறக்கவும் முத்திரையை உடைக்கவும் ஜெயங்கொண்டவர் என்றான். எங்கே அந்த சிங்கம்? அதன் கர்ச்சனை எங்கே? கெம்பீரம் எங்கே? யோவான் பார்க்கிறார். ஆனால், அவர் கண்ட காட்சி முற்றிலும் வேறானது. 'அப்பொழுது, இதோ அடிக்கப்பட்ட வண்ண மாயிருக்கிற ஒரு ஆட்டுக்குட்டி சிங்காசனத்திற்கும் நான்கு ஜீவன்களுக்கும் மூப்பர்களுக்கும் மத்தியிலே நிற்கக் கண்டேன். ...அந்த ஆட்டுக்குட்டியானவர் வந்து, சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்தவருடைய வலதுகரத்தி லிருந்த புஸ்தகத்தை வாங்கினார். அப்போது, தேவரீர் புஸ்தகத்தை வாங்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரராயிருக்கிறீர் என்ற துதிகள் எழும்பின.' (வெளி.5:6-14) இங்கே, 5:5ம் வசனத்திலே கிறிஸ்து ஒரு சிங்கமாகவும், அடுத்த 6ம் வசனத்திலே ஒரு ஆட்டுக்குட்டியாகவும் வர்ணிக்கப்பட்டிருப்பதைக் கவனித்தீர்களா? எப்படி சிங்கமும் ஆட்டுக்குட்டியும் ஒரே இடத்தில் குடியிருக்கமுடியும்? இரண்டினதும் குணாதிச யங்கள் எதிரும் புதிருமாக இருக்கும்போது, ஒரே நபர் எப்படி இரண்டுமாக இருக்கமுடியும்? மிருகங்களாகிய சிங்கமும் ஆட்டுக்குட்டியும் ஒன்றாயிருப்பது கூடாத காரியம்தான். ஆனால், வேதாகமத்துச் சிங்கமும் வேதாகமத்து ஆட்டுக்குட்டியும் ஒன்றாயிருக்கும் இருக்க வேண்டும் என்பதை நாம் கிறிஸ்துவில் காண்கிறோம்.

### கிறிஸ்துவே பாத்திரர்:

முதலாவது, இயேசு நம்மைப்போலவே மனுஷ சாயலாக, அதேசமயம் பரிசுத்தராக வெளிப்பட்டதால், அந்தப் புஸ்தகத்தின் உடனடி உறவினரும் சுதந்தர வாளியுமானார். அவர் ஒரு தேவதூதனாகவோ, வேறு அவதாரங்களாகவோ இருந்திருந்தால், அவர் நம்மை மீட்கும் சுதந்திரவாளியாக இருந்திருக்கமுடியாது. ஆக, நம்மை மீட்கும்படிக்கே அவர் மனித சாயலானார்.

இரண்டாவது, மனிதன் இழந்துபோன பெரிய உரிமைச் சொத்து தேவனிடமிருந்து பிரிக்கப்பட்ட உறவுதான். பிசாசின் கையில் விழுந்துபோன நம்மை மீட்டு மீண்டும் தேவனோடு சேர்ப்பதற்கு வெறும் யுத்தங் களும் ஆயுதங்களும் உதவமாட்டாது. அந்தகாரத்தின் அதிபதியோடு போராடவேண்டும். மனுக்குலத்தையே மரணிக்கச்செய்த பாவத்தோடு எதிர்த்துநிற்கவேண்டும். அதற்கு ஒரு பரிசுத்தர் வேண்டும். அப்படிப்பட்ட ஒருவராக, பிசாசோடும் பாவத்தோடும் எதிர்த்துப் போராடுவதற்குத் தகுதியுள்ளவராகவே கிறிஸ்து, யூதா கோத்திரத்துச் சிங்கமாக வெளிப்பட்டார். '....நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாக வும் இருந்த கையெழுத்தைக் குலைத்து அதை நடுவி லிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து, துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்து கொண்டு வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின் மேல் சிலுவையிலே வெற்றிசிறந்தார்' (கொலோசெயர் 2:14,15). ஆம், பிசாசுக்கும் பாவத்திற்கும் முன்னே கிறிஸ்து சிங்கமாக எதிர்த்து நின்று வெற்றிசிறந்தார். அல்லேலூயா!

ஆனால், மூன்றாவது, மனித கண்களுக்குக் காணப்படாத பிசாசுக்கும் பாவத்திற்கும் முன்னே சிங்கமாக நின்ற கிறிஸ்துதாமே அதேவேளை, ஜனங்க ளுக்கு முன்பாக ஆட்டுக்குட்டியாகவே காட்சியளித்தார். அவரை ஜனங்கள் என்னவும் செய்யலாம். அன்பாக கட்டி அரவணைக்கலாம், அடித்தும் துரத்தலாம். இழிவாகப் பேசலாம், தூஷிக்கலாம், தள்ளியும் வைக்க லாம். அடித்துக்கொன்றாலும்கூட அவர் வாய் திறவாத வராகவே இருந்தார். இந்த அமைதியும் கீழ்ப்படிவும் நீடியபொறுமையுமே கிறிஸ்துவை சிலுவையில் தொங்க வைத்தது. அவர் ஒரு ஆட்டுக்குட்டியாக ஆட்டுக்குட்டி யின் சுபாவத்தோடு சிலுவையிலே ஜீவனைக் கொடுக்க தயாராய் இருந்திராவிட்டால், ஒரு சிங்கமாக, சிங்கத் தின் கெம்பீரத்தோடு பாவத்தை எதிர்த்து வெற்றி கண்டிருக்கமுடியாது. அல்லேலூயா!

இந்த இருவேறுபட்ட குணாதிசயங்கள் கிறிஸ்து என்ற ஒருவரிலே காணப்படுகிறதை நாம் கவனிக்க வேண்டும். இதைக் குறித்து சகரியா பூணன் அவர்கள் எழுதிய ஒரு குறிப்பை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். 'பிசாசுக்கு முன்பாக அவர் சிங்கம். ஜனங்களுக்கு முன்பாகவோ அவர் ஒரு ஆட்டுக்குட்டி. ஆனால் நாம் உலகத்தில் காண்பது யாது? இன்று ஜனங்கள் உலகத் தில் நேர்மாறாக ஜீவிக்கிறார்கள். இவர்கள் பிசாசுக்கு முன்பாக ஆட்டுக்குட்டியைப்போலவே நிற்கிறார்கள். அவனைக்கண்டு அஞ்சுகிறார்கள். பாவத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியைப்போல நிற்கிறார்கள். அதாவது பாவத்திற்குத் தங்களை விட்டுக்கொடுக்கி றார்கள். ஆனால், ஜனங்களுக்கு முன்பாகவோ ஒருவருக்கொருவர் உள்ள ஐக்கியத்தில் சிங்கத்தைப் போல் இருக்கிறார்கள். ஒருவருக்கொருவர் பீறிட்டு சண்டையிட்டுக் கொள்கிறார்கள்.'

### நாம் ஜெயம்பெற்றவர்கள்:

அன்பானவர்களே, அந்த முத்திரையிடப்பட்ட புஸ்தகத்தில் எழுதப்பட்டுள்ள பயங்கரமான சம்பவங் களிலிருந்து, பாவத்தின் கொடூர விளைவுகளிலிருந்து நம்மை மீட்கவல்லவர், தேவாட்டுக்குட்டியாகிய கிறிஸ்து ஒருவரே. அவர் சிலுவையிலே மரித்ததால் தேவையான போதுமான கிரயத்தைச் செலுத்திவிட்டார். சாத்தானுக்கு எதிரான யுத்தத்தை ஒரு சிங்கமாக நின்று நடத்தி முடிக்க அவரே பாத்திரர். (வெளி.19:19-21) ஆட்டுக்குட்டி யாகிய கிறிஸ்து ஏற்கனவே செய்துமுடித்துவிட்ட மகத்தான கிரியையினாலே யூதா கோத்திரத்துச் சிங்கம் இன்றும் வெற்றிவேந்தனாகவே நிற்கிறார். அதுதான் சத்தியம். அந்த வெற்றியில் நாமும் இன்று பங்குகொள் ளும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம். அந்தச் சிலாக்கியத்தின்படி பாவத்தின் முன் நாம் தலைகுனிந்து நிற்கவேண்டியதில்லையே! நமது சொந்தப் பெலத்தி னால் இது கூடாதுதான். ஆனால் நம்முடைய கர்த்தரா கிய கிறிஸ்துவினால் நமக்கு எல்லாவற்றையும் செய்ய பெலனுண்டு. அவருடைய கிருபையால் நாம் நிச்சயம் பாவத்திற்கு எதிராக ஜெயம்பெற்று எழும்பமுடியும்.

ஆட்டுக்குட்டியின் பலியையும் யூதா கோத்திரத்துச் சிங்கத்தின் வெற்றியையும் விசுவாசித்து நித்தியவாழ்வு என்ற கிருபையின் வாக்கைப் பெற்றதால் அந்த வெற்றி நமக்கு நிச்சயமாமே.

இப்படிப்பட்ட கிருபையைப் பெற்ற நாம், எமது வாழ்வில் தோற்றுப்போவதற்குரிய காரணம் என்ன? இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

**1. தீமை:** இந்த உலகம் உள்ளவரை தீமை இருக்கும். பாவம் இருக்கும். ஆகவே, தீமைக்கும் நன்மைக்கும், பாவத்திற்கும் பரிசுத்தத்திற்கும் எப்பொழுதும் மோதல் இருக்கும். நமக்குள் இருக்கும் ஆவிக்குரியதும் மாம்சத்திற்குரியதுமான இரு வெவ்வேறான சுபாவங்கள் நமக்குள் எப்பொழுதும் மோதிக்கொண்டுதான் இருக்கும். இதில் யார் வெற்றி பெறுவார்கள்? இங்கேதான் தெரிவு என்ற விடயம் வருகிறது. நான் தீமையைத் தெரிவுசெய்வேனா? நன்மையைத் தெரிவுசெய்வேனா?

**2. தெரிவு:** நன்மையும் தீமையும், ஜீவனும் மரணமும் நமக்கு முன்னே இருக்கிறது. இதில் நாம் நன்மையைத்தான், ஜீவனைத்தான் தெரிவுசெய்ய வேண்டுமென்ற அறிவும் நமக்கு இருக்கிறது. ஆனால் நாம் எதைத் தெரிவுசெய்கிறோம்?

இப்போ சொல்லுங்கள்; தீமையா நன்மையா? எது நமக்கு வேண்டும். இதுவே நமக்கிருக்கும் பெரிய சவால், நாம் ஜெயம்பெற்று ஜீவகிரீடத்தைப் பெற்றுக்கொள்வதும், தோல்வியுற்று நித்திய வேதனையை அனுபவிப்பதும் நமது இந்தத் தெரிவிலேதான் இருக்கிறது. நாம் ஏன் இந்தத் தெரிவிலே தோற்றுப்போகிறோம்? ஏனெனில், நமக்குள் இருக்கும் சிங்கத்தை நாம் புரிந்திருக்கவும் இல்லை. நாம் ஆட்டுக்குட்டிகளாக நிற்கவேண்டிய இடங்களை தெரிந்திருக்கவும் இல்லை. சிங்கமாக நிற்கவேண்டிய இடத்திலே ஆட்டுக்குட்டிகளைப் போலவும், ஆட்டுக்குட்டியாக நிற்கவேண்டிய இடத்திலே சிங்கம்போலவும் நாம் நிற்கிறோம். ஒரு சிங்கத்தைப் போலவும் அதேசமயம் ஆட்டுக்குட்டியைப் போலவும் நின்று வெற்றிசிறந்த ஆண்டவர் நமக்குள்ளே வாசம் பண்ணுவது மெய்யானால், பாவத்துக்கு முன்னே ஆட்டுக்குட்டியைப்போலவும், மனுஷருக்கு முன்னே சிங்கத்தைப்போலவும் மாறுபாடாக நாம் வாழுவது எப்படி? பாவத்தை எதிர்த்து சிங்கம்போல எழும்பாமல், பாவத்திற்குப் பயந்து ஏன் துணைபோகிறோம்? ஏன் உலகத்திற்குப் பயப்படுகிறோம்? தேவனுக்கென்று வைராக்கியமாய் நின்று, வார்த்தைக்குப் புறம்பான காரியங்களை எதிர்க்க ஏன் தடுமாறுகிறோம்?

அதேசமயம் ஆட்டுக்குட்டியாக சாதுவாக இருக்கவேண்டிய இடங்களில் வீணாக சீறிப்பாய்வது எவ்வளவு வெட்கம். இன்னும் சில மாதங்களில் கிறிஸ்துவின் பாடு மரணங்களை நினைவுகூரப்போகும் நாம், பிற மனித உறவுகளில் வைராக்கியம் காட்டுவது ஏன்? ஏன் சண்டைகள், பிரிவினைகள், கோபங்கள்? ஏன் விட்டுக்கொடுக்க முடியாமல் தடுமாற்றம்? குற்றச்சாட்டுக்கள் வரும்போது பொறுமையிழப்பது ஏன்? மாற வேண்டும், நாம் மாறவேண்டும். '.....சாகப்போகிற மனுஷனுக்கும், புல்லுக்கொப்பாகிற மனுபுத்திரனுக்கும் பயப்படுகிறதற்கும், வானங்களை விரித்து, பூமியை அஸ்திபாரப்படுத்தி, உன்னை உண்டாக்கின கர்த்தரை மறக்கிறதற்கும் நீ யார்?' (ஏசாயா 51:12) என்று கர்த்தர் கேட்கிறார். எந்தவிடத்திலும் சோர்ந்துபோகவேண்டாம். நமக்குள் தூங்கிக்கொண்டிருக்கும் சிங்கத்தைத் தட்டி எழுப்பி விடுவோமாக. அதேசமயம் எதிர்பாராத போராட்டங்கள், சக மனிதரின் புறக்கணிப்பு, தனிமை நிலை, இவற்றால் கலங்கவும் வேண்டாம். மனிதர் முன்னிலையில் ஆட்டுக்குட்டியின் சுபாவத்தையுடையவராய் இருந்தால்தான், நமக்காய் வைக்கப்பட்டிருக்கிற வெற்றியின் கிரீடத்தைப் பெற்றுக்கொள்ள நாம் பாத்திரராவோம்.

**சிங்கமும் ஆட்டுக்குட்டியும் ஒன்றாயிருக்கும்:**

நமக்கு ஒரு நிச்சயம் உண்டு. இந்த உலகம் உள்ளவரைக்கும்தான் நமக்குள் இப் போராட்டங்கள். ஆண்டவருடைய இரண்டாம் வருகையிலே தீமை இருக்காது, தொடர்ந்து தெரிவும் இருக்காது. ஏனெனில், 'என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்குசெய்வாருமில்லை. கேடு செய்வாருமில்லை' (ஏசாயா 11:9) என்றெழுதப்பட்டுள்ளது. 'ஓநாய் ஆட்டுக்குட்டியோடே தங்கும். புலி வெள்ளாட்டுக்குட்டியோடே படுத்துக்கொள்ளும். கன்றுக்குட்டியும் பாலசிங்கமும் காளையும் ஒருமித்திருக்கும். ஒரு சிறுபையன் அவைகளை நடத்துவான். பசுவும் கரடியும் கூடிமேயும். அவைகளின் குட்டிகள் ஒருமித்துப் படுத்துக்கொள்ளும். சிங்கம் மாட்டைப்போல வைக்கோல் தின்னும். பால்குடிக்குழந்தை விரியன் பாம்பு வளையின்மேல் விளையாடும். பால் மறந்த பிள்ளை கட்டுவிரியன் புற்றிலே தன் கையை வைக்கும்' (ஏசாயா 11:6-8).

ஆக, மெய்யாகவே ஆண்டவருடைய வருகையிலே மிருகங்கள் நிச்சயமாய் ஒன்றாயிருக்கும். அப்படியிருக்க, இன்று, கிறிஸ்து நமக்குள் வாழும்போது நமக்குள் இருக்கும் சிங்கம் தன்னிலை மறந்து சீறிப்பாய வேண்டியதில்லை. அது யூதா கோத்திரத்துச் சிங்கம். பாவத்தை எதிர்த்து வெற்றிகண்ட சிங்கம். அந்தச் சிங்கம் நம்மில் வெளிப்படவேண்டுமானால், தேவன் நேசிக்கும் மனுக்குலத்தின் முன்னே நாம் ஆட்டுக்குட்டிகளாக நிற்கத்தான் வேண்டும். பாவத்தை எதிர்ப்பதில் சிங்கத்தைப் போலவும், மனிதர் முன்னிலையில் ஆட்டுக்குட்டியைப் போலவும் வாழ தேவாட்டுக்குட்டியும் யூதா கோத்திரத்துச் சிங்கமுமான கிறிஸ்து தாமே நம் எல்லோருக்கும் தமது ஆவியைத் ஈந்தருளுவாராக. இதுவரை நடக்காத புதிய வழியிலே கர்த்தர் நம்மை நடத்துவாராக. நாமும் கீழ்ப்படிவோடு அவரது வழியில் நடக்க தூய ஆவியானவர்தாமே நம் அனைவருக்கும் பெலனளிப்பாராக. ஆமென்.




### சரீரம் ஒன்றாயினும் வரங்கள் பல

ஆதிச்சபைகளில் ஆவிக்குரிய வரங்கள் மிக முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருந்தன. முற்காலத்தில் மட்டுமல்ல இக்காலத்திலும்கூட, தேவ பிள்ளைகள் சிறந்த தேவ ஊழியத்தைச் செய்யவேண்டுமானால், புதிய ஏற்பாட்டில் ஆவியின் வரங்களைப்பற்றி கூறப்பட்டுள்ள உண்மைகளை தெளிவாக விளங்கிக்கொள்வது அவசியமாகிறது. ரோமர் 12, 1கொரிந்தியர் 12ம் அதிகாரங்களில் இவற்றின் விபரங்களை நாம் அறிந்து கொள்ளலாம்.

கொரிந்தியர் 1ம் நிருபத்தின் 12ம், 13ம், 14ம் அதிகாரங்கள் முக்கியமாக கருதப்படவேண்டிய தொன்றாகும். 12ம் அதிகாரத்தில் ஆவிக்குரிய வரங்கள் சிலவற்றின் அடிப்படை உண்மைகளையும், அவை பகிர்ந்தளிக்கப்படும் விதத்தையும் 13ம் அதிகாரத்தில் எவ்வித உணர்வோடு இந்த வரங்கள் பாவிக்கப்பட வேண்டும் என்பதையும், 14ம் அதிகாரத்தில் இவ்வரங்களைச் செயல்படுத்துகையில் ஏற்படக்கூடிய தவறுகளும், அதற்கான பரிகாரங்களும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

### சரீரத்தின் ஐக்கியம்

கொரிந்தியர் 1ம் நிருபத்தின் 12ம் அதிகாரத்தில் முக்கியமான இரு அடிப்படைத் தத்துவங்களைக் காணலாம். சரீரம் ஒன்றானாலும் அவயவங்கள் வெவ்வேறாக இருப்பதுபோல், கிறிஸ்துவும் ஒருவராகவே இருக்கிறார். நாம் யூதராகவோ கிரேக்கராகவோ அடிமைகளாகவோ சுயாதீனராகவோ எவராக இருந்தாலும், ஒரே சரீரத்திற்குள்ளே ஆவியினால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, தாகம் தீர்க்கப்பட்டோம் என்பது இவ் அத்தியாயத்தில் 12ம், 13ம் வசனங்களில் கூறப்பட்டுள்ளன. இவை ஆவிக்குரிய மையக்கருத்துகளாக திட்டவட்டமாக காட்டப்பட்டுள்ளன. இங்கு முதலாவது சரீரமாக கிறிஸ்துவின் சரீரம் வலியுறுத்தப்பட்டுள்ளது. மறுபடியும் பிறந்த ஒவ்வொரு கர்த்தருடைய பிள்ளைகளையும் இச் சரீரத்தில் அடங்கியுள்ள நாமும், ஆவியின் மூலமாகவே ஞானஸ்நானம் பண்ணப்பட்டு ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளோம். சரீரம் ஒன்றாக இருந்தாலும் அவயவங்கள் பற்பல இருப்பதுபோல இது அமைகிறது.

கிறிஸ்துவின் சரீரத்தினுள் நம்மை ஞானஸ்நானம்பண்ணுவதுடன் ஆவியினால் நிறைவேற்றப்பட வேண்டிய வேறு காரியங்களும் இருக்கின்றன. ஒரே ஆவிக்குள்ளாகவே நாம் தாகம் தீர்க்கப்பட்டோம் என்பதிலிருந்து ஆவியின் மூலமாகவே நாம் வல்லமையினால் நிரப்பப்பட்டோம் என்பதையும் அறிந்துக் கொள்ளலாம். ஆவியானவரே ஒவ்வொரு விசுவாசியின் வாழ்விலும் மூலாதாரமும் வழிகாட்டியும் வல்லமையுமாக விளங்குகிறார் (He is Source of life and guidance and power for each believer).

கிறிஸ்துவின் சரீரம் ஒன்றாக இருப்பதினாலும், அவயவங்களாகிய நாமும் கிறிஸ்து இயேசுவில் ஒன்றாயிருப்பதினாலும் நாம் பெற்றிருக்கும் ஐக்கியத்தை அலட்சியம் செய்து கவனியாமல் விட்டுவிடக்கூடாது.

### ஆவியின் உன்னதமான தேர்வு

1கொரிந்தியர் 12:7ல், தேவ ஆவியானவரின் அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கின்றது என்பதையும், இதன் 11ம் வசனத்தில் இவற்றையெல்லாம் தமது சித்தத்தின்படி ஆவியானவரே பகிர்ந்தளித்து நடப்பிக்கிறார் என்பதையும் இலகுவாக புரிந்துகொள்ளக் கூடியதாயுள்ளது.

கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கமாக இருக்கும் ஒவ்வொரு விசுவாசிக்கும் தள்ளுபடியில்லாமல் ஒன்றோ அல்லது பல வரங்களோ அநுக்கிரகம்பண்ணப்பட்டிருக்கின்றன. மேலும் ஆவியானவரே அவரவருக்கு அருளப்படவேண்டிய வரங்களைத் தெரிவுசெய்கிறார். கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கமாகிய தனிப்பட்ட கிறிஸ்தவர்

களால் இவ்வரங்கள் தேர்ந்தெடுக்கப்படுவது இல்லை என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆகவே, ஒவ்வொரு வரமும் பரிசுத்த ஆவியானவரின் உன்னதமான சித்தத் தின்படி அருளப்படுவதால் இவ்விடயத்தில் சுயசித்தத் திற்கு இடம் இல்லை எனலாம்.

ஆவியின் வரங்களைப் பற்றிய நமது கருத்து எப்படி இருப்பினும் இவற்றைக்குறித்து கர்த்தரால் கூறப் பட்ட வார்த்தைகளே உண்மையும் சத்தியமுமானவை களாகும். ஆவியானவரின் வரங்களைப் பற்றிய இவ் உண்மையை விளங்கிக்கொண்ட விசுவாசிகளில் சிலர் ஆவிக்குரிய வரங்கள் தங்களிடம் இருப்பதையிட்டு, எவ்விதமான உணர்வும் ஏற்படாதபட்சத்தில், இருப்பது போன்ற வரங்கள் தங்களிடம் இல்லை என மறுப்புத் தெரிவித்திருக்கிறார்கள். எல்லா விசுவாசிக்கும் ஏதாவது ஒரு வரமாவது அருளப்பட்டுள்ளது (1கொரிந்தியர் 7:11) நமக்கு அருளப்பட்ட வரம் என்ன என்பதை நாம் அறியாமல் இருப்பது நம்முடைய தவறாகும்.

ஆவியானவரால் நமக்கு அருளப்பட்ட வரம் என்ன என்பதை உணர்ந்து, ஆவியானவர் அநுக்கிரகிக் கும் ஞானத்தினாலும், பெலத்தினாலும் அவ்வரங்களை பிரயோஜனப்படுத்துதல் வேண்டும். இதை விடுத்து அருளப்படாத வரங்களை எவ்வாறேனும் பெற்றுக் கொள்ளவேண்டும் என்ற வீண்முயற்சியில் காலத்தை வீணாக்கக் கூடாது. தேவனின் வரங்களில் வித்தியாசம் இருந்தாலும் அவற்றை அருளும் ஆவியானவர் ஒருவராகவே இருக்கிறார். அதுபோல் ஊழியங்களில் வித்தியாசம் இருந்தாலும், செயல்முறைகளில் வித்தி யாசம் இருந்தாலும் எல்லாவற்றையும் நடத்துவிக்கும் கர்த்தர் ஒருவரே என்பது கொரிந்தியர் 12ம் அதிகாரத் தில் மேலும் விபரிக்கப்பட்டிருக்கிறது.

வரங்களில் பலவகை இருந்தாலும், தனி மனிதனிடம் காணப்படும் தாலந்துகளையோ, தனித்து வத்தையோ அல்ல, கிறிஸ்துவினால் உண்டாகும் புது ஜீவனின் ஒரு பாகமாகிய ஆவியின் வரங்களைப் பற்றியே இங்கு குறிப்பிடப்படுகிறது.

வரங்கள் வித்தியாசப்படும் போது அவற்றின் நோக்கங்களும் வித்தியாசப்படுவது இயல்பு. ஒவ்வொரு வரத்தின் நோக்கமும், பலவகையில் செயலாற்றும் வல்லமை (God of variety) கொண்ட கர்த்தரின் திட்டத் தின்படி இணைக்கப்பட்டிருந்தாலும், எல்லாவரங்களும் ஒரே நோக்கத்திற்காகச் செயல்படுவது இல்லை. அதாவது, வெவ்வேறான நோக்கங்களை நிறைவேற் றவே இவ்வரங்கள் அருளப்படுகின்றன. நோக்கங்களின் மாறுபாட்டை கர்த்தருடைய ஆவியானவரே திட்டமிட்டு நடத்துகிறார் என்பதை நாம் உணர்தல் வேண்டும்.

கர்த்தருடைய நோக்கங்கள் நல்லமுறையில் நிறைவேற்றப்படுமானால், கர்த்தரால் எமக்கு அருளப் பட்டிருக்கும் ஆவியின் வரங்களைத் தகுந்தமுறையில் உபயோகப்படுத்துதல் வேண்டும். இவ்வித ஆவியின் வரங்களின் மூலமே போதகர்களையும், பிரசங்கிகளை யும் மூப்பர்களையும் ஊழியக்காரர்களையும் கர்த்தர் தேர்ந்தெடுத்துள்ளார். மேலும் அவருடைய சித்தம் இவ்வுலகில் சிறந்தமுறையில் செயல்படவேண்டும் என்பதற்காக அவரது ஜனங்களுக்கு எண்ணற்ற வரங்கள் அருளப்பட்டிருக்கின்றன.

ஆவியின் வரங்கள் பலவகையாக இருந்த போதிலும் அவை யாவும் பரிசுத்த ஆவியானவரின் ஆளுகைக்கு உட்பட்டு, கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்றவேண்டும் என்ற ஒரே நோக்குடன் இயங்கு கின்றது என்பதை நாம் அறிகிறோம். ஆகவே தேவ ஊழியஞ்செய்பவர்களின் சிலர் தாங்கள் பெற்றிருக்கும் வரங்களைப்போல் மற்றவர்களும் பெற்றிருக்கவேண்டும் என எண்ணுவது தவறான கருத்தாகும். உதாரணமாக சில பிரசங்கிமார் தங்களைப்போல் பிரசங்கிமார் அல்லா தவர்கள் கர்த்தருடைய சித்தத்தைவிட்டு விலகியவர் களாகக் கருதுவதுண்டு. அதேபோல் சில ஊழியக்காரர் களும் ஊழியக்காரர் அல்லாதவர்கள் கர்த்தருடைய சித்தத்தைவிட்டு விலகியவர்களாக நினைக்கிறார்கள். இது தவறான கருத்தாகும்.

இக்கூற்றுக்கு இக்காலப் போர்முறை சிறந்த உதாரணமாக அமைகிறது எனலாம். போர்முறையில் கடற்படை, விமானப்படை, தரைப்படை என முப்படை உள்ளன. மேலும் தரைப்படையில் பீரங்கிப்படை, வாகனப்படை, காலாட்படை போன்ற பிரிவுகளும் உண்டு. இப்படிப்பல பிரிவுகள் இருந்தபோதிலும், முப்படையினரும் ஒருங்கிணைந்து போர்புரிந்தே தங்கள் இலட்சியத்தை அடைகின்றனர்.

கிறிஸ்தவ ஊழியமும் இதைப்போன்ற ஆவியின் பிரகாரமான போராட்டம் எனலாம். கர்த்தர் தமது ஜனங்களுக்கு அருளிய ஆவியின் வரங்கள் சிறந்தமுறையில் செயல்படவேண்டும் என்பதற்காக சக்திமிக்க ஆயுதங்களைத் தமது ஊழியருக்குக் கொடுத்து நிறைவேற்றவேண்டிய பணிகளையும் ஒழுங்காக திட்டமிட்டுள்ளார்.

கொரிந்தியர் 12ம் அதிகாரத்தில் 7ம் வசனம் தொடக்கம் 10ம் வசனம் வரை குறிப்பிடப்பட்டிருக்கும் ஒன்பது வகையான ஆவியின் வரங்களைப்போல், கலா. 5:22,23ம் வசனங்களில் ஒன்பது விதமான ஆவியின் கனிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவை இரண்டும் ஒன்றானவையல்ல, வெவ்வேறானவையே!

ஆவியின் கனியை ஆவியின் குணாதிசயம் (Graces of the Spirit) எனக்கூறலாம். இவை அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொருமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் என்பவற்றுள் அடங்குகிறது.

விசுவாசிகளை பலப்படுத்தி, அவர்கள் கர்த்த ருக்கான ஊழியம் செய்யும் வண்ணம் ஆவியினால் அருளப்படும் திறமைகளே ஆவியின் வரங்களாகும். ஆவியின் கனி எனப்படும் ஆவியின் குணாதிசயங்கள் நமது ஜீவியத்தின் புனித தத்துவங்களாகும். இவை நமது வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்டவை. ஆவியின்

வரங்களோ நாம் செய்யும் ஊழியங்களோடு சம்பந்தப் பட்டவை என்பதை உணர்ந்துக்கொள்ள வேண்டும். (The gifts are related to our doing and the graces to our being)

### மூவகையான வரம்

ஆவியின் வரங்கள் ஒன்பது வகையானவை என அறிந்தோம். இந்த ஒன்பது வகையான வரங்களை யும், புத்தியோடு சம்பந்தப்பட்ட வரங்கள், சித்தத்தோடு சம்பந்தப்பட்ட வரங்கள், உணர்ச்சியோடு சம்பந்தப்பட்ட வரங்கள் என மூன்று முக்கிய பிரிவுகளாக பிரிக்கலாம்.

புத்தியோடு சம்பந்தப்பட்ட வரங்களில் ஞானம், அறிவு, விசுவாசம் என்பவைகளும் சித்தத்தோடு சம்பந் தப்பட்ட வரங்களில் குணமாக்குதல், அற்புதம்செய்தல், தீர்க்கதரிசனம் உரைத்தல் என்பவைகளும், உணர்ச்சி யோடு சம்பந்தப்பட்ட வரங்களில் ஆவியைப் பகுத்தறிதல், பற்பல பாஷைகளைப் பேசுதல், வியாக்கி யானம் பண்ணுதல் என்பவைகளும் அடங்குகின்றன.

### புத்தியோடு சம்பந்தப்பட்ட வரங்கள்

ஞானம் புத்தியோடு சம்பந்தப்பட்ட வரங்களில் ஒன்றாகும். இவ்வரத்தினால் ஞானத்தோடு பேசவும், விவேகமாக உரையாடவும், ஆத்மீக அறிவை உணர்த் தக்கூடியதாக உரையாற்றவும் முடியும். இத்தகைய சக்திவாய்ந்த ஞானத்தை கடவுளிடமிருந்து பெற்றுக் கொள்ளலாமே தவிர, வேறு எந்த விதத்திலும் பெற்றுக் கொள்ள முடியாது. ஆகவே இதனை மிக முக்கியமான வரமாகக் கருதவேண்டும்.

ஒரு விசுவாசி தனது ஆன்மீக காரியங்களை ஆராய்ந்து பார்ப்பதற்கு ஞானம் பயன்படுகிறது. அப்படி ஆராய்ந்து அறிந்த கருத்துக்களை மற்றவர்களும் புரிந்துகொள்ளும் விதமாய் விளக்கி கூறுவதற்கு அவன் பெற்ற அறிவு பயன்படுகிறது. ஆகவே ஞானமும் அறிவும் ஒருங்கிணையும்போதுதான் மிக பயனுள்ள ஊழியத்தைக் கர்த்தருக்குச் செய்யமுடியும். ஞானத் தோடு இணையாத அறிவு பண்பாடற்ற மன அகங் காரத்தை ஏற்படுத்தி விடுகின்றது.

அடுத்ததாக விசுவாசம் என்ற வரம் குறிப்பிடப் பட்டுள்ளது. இரட்சிப்பு அடைய உதவும் விசுவாசத்தை விட, விசுவாசம் என்னும் வரம் மாறுபட்டது. இரட்சிப்புக் கான விசுவாசமோ கர்த்தரால் அருளப்படுகிறது. “கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப் பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு” எனவும் “ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டான தல்ல” எனவும் எபேசியர் 2:8,9 ம் வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பரிசுத்த ஆவியினால் அருளப்படும் விசுவாசம் என்னும் வரத்தினால் ஒரு விசுவாசி கர்த்தருக்குப் பயனுள்ள ஊழியம்செய்ய முடியும். ஞானத்தையும் அறிவையும் பிறர் அறியக்கூடியதாக கிரியைகளின் மூலம் செயற்படுத்தும் வல்லமை இவ்வரத்திற்குண்டு. இத்தகைய வரத்தினால் தான் கர்த்தருக்காகப் பல தீரச் செயல்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இஸ்ரவேல ரின் தலைவனான மோசே இந்த விசுவாசம் என்னும் வரத்தைப் பெற்றிருந்தான். நீ உன் கோலை ஓங்கி, உன் கையைச் சமுத்திரத்தின்மேல் நீட்டு என்று கர்த்தர் கட்டளையிட்டபடி அவன் செய்தபோது சமுத்திரம் இரண்டாக பிளந்து வழிவிட்டது(யாத் 14:16,21). மேலும், கர்த்தர் கூறியபடி தனது கோலால் கன்மலையை அடித்தும், அதிலிருந்து பெருகிய நீரினால் இஸ்ரவேலர் தங்கள் தாகத்தைத் தீர்த்தனர் (யாத் 17:6). இவ்விதமாக மோசே ஒவ்வொரு விஷயத்திலும் கர்த்தரை நம்பியிருந் தான், அவரால் வழிநடத்தப்பட்டான் என அறிகிறோம்.

கர்த்தரை நம்பிய யோசுவாவும், சூரியனை தரித்து நிற்கும்படி கட்டளையிட்டபோது, மோசேயிடம் காணப்பட்ட விசுவாசம்தான் அவனிடமும் காணப்பட்டது. சூரியனும் யோசுவாவின் சொல்கேட்டு அசையாமல் நின்றது.

யூதாவின் அரசனான யோசபாத்திடம் காணப் பட்டதும் இதே விசுவாசம்தான். தான் பலத்த சத்துருக் களினால் சூழப்பட்டிருந்தபோதும் கடவுள் பயமற்ற ஆகாப் என்ற இஸ்ரவேல் அரசனை விட்டு பிரிந்தால், கர்த்தர் தனக்கு அனுசரணையாக இருப்பார் என நம்பினான். எனவே ஆகாபுடன் தான் செய்திருந்த இராணுவ உடன்படிக்கையை இரத்து செய்துகொண் டான். அவன் விசுவாசித்தபடியே கர்த்தர் அவனுக்கு அனுசரணையாயிருந்து காப்பாற்றினார் (2நாளா 18:31).

கிதியோன் தன்னிடம் இருந்த மூன்னூறு பேரைக்கொண்டு கர்த்தருக்காக வீரச் செயல்களைப் புரிந்தும் (நியா 7:7,8) பேதுரு கடலில் நடந்ததும் (மத் 14:29) இதைப்போன்ற விசுவாசத்தினால்தான்.

“ஹட்சன் டெய்லர்” என்பவர் சீனாவில் மிஷனரி யாகப் பணியாற்றியபோது, சீனாவிலிருந்து இங்கிலாந் துக்கு கடித போக்குவரத்திற்கு மட்டும் நாலு மாதங்கள் எடுத்தன. ஆகவே தமது உடனடித் தேவைகளை இங்கிலாந்தில் உள்ளோருக்கு அறிவித்து உதவி பெற லாம் என்ற நம்பிக்கைக்கு இடம் இல்லாமல் இருந்தது. ஆனால் ஹட்சனோ கர்த்தர் பேரில் தமக்கிருந்த விசுவாசத்தினால், ஜெபம் என்னும் கம்பியில்லாத் தந்தி மூலம் தம் தேவைகளை பிதாவிடம் கூறிவந்தார். பரம பிதா ஹட்சனுடைய தேவைகளை இங்கிலாந்தில் உள்ளோருக்கு அறிவித்து தேவையான பொருட்களை தகுந்தநேரத்தில் அவருக்கு கிடைக்கும்படி செய்தார். இவ்வகையான விசுவாசத்தையே 1ம் கொரிந்தியர் 12ம் அதிகாரத்தில் கர்த்தர் குறிப்பிட்டிருக்கிறார்.

### சித்தத்துடன் சம்பந்தப்பட்ட வரங்கள்

சித்தத்தோடு சம்பந்தப்பட்ட வரங்களில் முதலாவதாக குணமாக்கும் வரம் குறிப்பிடப்பட்டிருக்கி

றது. மருந்தின் மூலமாகவோ, சத்திரசிகிச்சை மூலமாகவோ அல்லது கர்த்தரால் அருளப்பட்ட சுகப்படுத்தக் கூடிய வல்லமையினாலோ வியாதிகளை குணமாக்கும் வல்லமை இந்த வரத்திற்குண்டு. இங்கு குறிப்பிடப்பட்ட குணமளிக்கும் வகைகளில், எதாவது ஒன்றால் இவ்வரத்தைச் செயல்படுத்தலாம். ஏதாவது ஒன்றை மட்டும் தான் உபயோகிக்கவேண்டும் என்ற கட்டுப்பாடு இதற்கு இல்லை.

தங்களுக்கு இத்தகைய குணமளிக்கும் வரம் அருளப்பட்டிருப்பதாகக் கூறும் சிலர் கையாளும்முறைக் கும், ஆதிச்சபையில் பரிசுத்தஆவியானவரினால் குணமளிக்கும் வரத்தை பெற்றவர்கள் பாவித்த முறைக்கும் பெரும் மாறுபாடு இருக்கிறது.

புதிய ஏற்பாட்டு காலத்தில் தெய்வீக சுகம்பெற விரும்புவோரிடம், எந்தவிதமான நன்மையையும் எதிர்பார்த்து சுகம் அருளப்படவில்லை. குணமளிக்கும் வரத்தை பெற்றவர்கள் தங்கள் வரத்தை மட்டுமே ஆதாரமாகக்கொண்டு சுகம் அளித்தனர். இவ்வரத்தின் மூலம் மரித்தோரை உயிரோடு எழுப்பியதைக் குறித்து புதிய ஏற்பாட்டில் வாசிக்கிறோம். விசுவாசத்தை எதிர்பார்த்துக் குணமாக்குபவர்கள் மரித்துப்போனவர்களிடம் எப்படி விசுவாசத்தை எதிர்ப்பார்க்க முடியும்? ஆனால் இக்காலத்தில் தெய்வீக சுகத்தைப் பெற விரும்புபவர்கள் கிறிஸ்தவர்களாகவும், விசுவாசிகளாகவும் இருக்கவேண்டுமென தெய்வீக சுகமளிக்கும் சிலர் கருதுகின்றனர். இதுபோன்ற தவறான கருத்துக்களைக் குறித்து வாக்குவாதம் செய்வது எமது நோக்கமல்ல, என்றாலும் இவ்விஷயத்தைக் குறித்து கர்த்தருடைய ஜனங்களை எச்சரிக்கவேண்டியது அவசியமாகிறது.

இரண்டாவதாக அற்புதங்களை செய்யும் வரம் குறிப்பிடப்பட்டுள்ளது. தெய்வீக சக்தியுடன் கூடியதும், தனி மனிதனுடைய சக்திக்கு அப்பாற்பட்டதுமான முறையில் அற்புதங்களைச் செய்யக்கூடியதுமான ஆற்றல் கொண்ட வரம் இது. இவ்வரத்தின் மூலம் மனிதனால் செய்யமுடியாத அற்புதங்களும் அதிசயங்களும் நிகழ்த் தக்கூடியதாக இருப்பதிலிருந்து இவையாவும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் நிகழ்கின்றன என்பதைத் தெளிவாகப் புரிந்துக்கொள்ளமுடியும்.

சித்தத்துடன் சம்பந்தப்பட்ட வரங்களில் மூன்றாவதாக தீர்க்கதரிசன வரம் குறிப்பிடப்பட்டுள்ளது. தீர்க்க தரிசனம் என்றால் எதிர்காலத்தை முன்னறிவிப்பது மட்டுமல்லாமல் உபதேசம் செய்யக்கூடிய ஆற்றலையும் கொண்டுள்ளது. தங்கள் நாவன்மையால் சிறந்த சொற்பொழிவுகளை ஆற்றும் திறமை சிலருக்கு இருக்கிறது. வேறு சிலருக்கு இத்தகைய நாவன்மை இல்லாது விடினும் பலரையும் கவரக்கூடிதாக சுவையுடன் உரையாற்றும் திறமையிருக்கிறது. ஆனால் தீர்க்க தரிசன வரத்தைப் பெற்றவனுடைய வார்த்தைகளோ இதயங்களை உணர்வடையச் செய்யும் தன்மை கொண்டவை. ஆவியானவருடைய வல்லமையினால் சத்தியங்களை எடுத்துகூறும்போது பேச்சு திறமையினால் அல்ல, ஆவியின் வல்லமையினால் இருதயங்கள் ஆட்கொள்ளப்படுகின்றன.

## உணர்ச்சியுடன் சம்பந்தப்பட்ட வரங்கள்

மூன்றாவதாகக் கூறப்பட்டிருக்கும் உணர்ச்சி பகுத்தறிவோடு சம்பந்தப்பட்ட வரமாகும். இவ்வரத்தை பெற்றவன் கர்த்தரால் உண்டான ஆவி எவையென்றும் பொய்யானவை எவையென்றும் பகுத்தறியும் திறமை கொண்டவனாயிருப்பான்.

தேவனருளிய வேதாகமத்தை முழுமையாக பெற்றிருக்காத முற்காலத்தில்கூட, கர்த்தருடைய நற்செய்திகளையும், மனிதனுடைய அறிவினால் பெறப் பட்ட செய்திகளையும் வேறுபடுத்திக் காட்டக்கூடிய ஊழியர்கள் தேவைப்பட்டனர். வேத சத்தியங்களை மாறுபாடாக வியாக்கியானம் செய்யும் இக்காலத்திற்கும் இவ் ஊழியம் தேவையாக இருக்கிறது. இயேசுகிறிஸ்துவைக்குறித்து சாதுரியமாகப் பிரசங்கிக்கும் சில மாய்மாலக்காரர்களால் சபையோர் வஞ்சிக்கப்படும் இக் காலத்தில், உண்மை எது, உண்மைக்கு புறம்பானது எது என்பதை பகுத்தறியக்கூடிய ஆவியின் வரம் தேவைப்படுகிறது. சாத்தான் ஆவியின் வரங்களைத் தந்திரமாக நடித்துக்காட்டினாலும், அவனால் ஆவியின் கனி எனப்படும் ஆவியின் குணாதிசயங்களைப் பிரதிபலிக்க முடியாது (கலா 5:22) ஆகவே ஆவியின் வரங்களில் எவை உண்மையானவை என்றும், சாத்தானால் நடிக்கப்படுபவை எவை என்பதையும் பகுத்தறியும் திறமை அவசியமாகிறது.

அடுத்து பல மொழிகளைப் பேசக்கூடிய ஆற்றலும், பற்பல மொழிகளில் மொழிபெயர்க்கக்கூடிய திறமையும் இவ்வரத்துடன் இணைந்திருக்கிறது. பேசுபவன் சபையோருக்கு விளங்காத பாஷையில் பேசுவானானால் சபையோருக்கு விளங்கக்கூடிய பாஷையில் அதன் அர்த்தத்தையும் சொல்லவேண்டும். அதுபோல் பற்பல பாஷைகளைப் பேசும் கிறிஸ்தவ ஊழியர்கள் மத்தியில் உறவாடவும், கருத்துக்களைப் பரிமாறவும் அவரவர் பாஷையில் பேசக்கூடிய ஊழியர்கள் சபைக்குத் தேவைப்படுகின்றனர்.

உலகில் பல பாஷைகள் பேசப்படுகின்றன. ஆகவே சுவிசேஷம் பரவுவதற்கு பாஷை வேறுபாட்டினால் ஏற்படும் தடையை நீக்குவதற்காக கர்த்தர் தமது ஊழியர்கள் முன் ஒருபோதும் படித்திராத பாஷைகளை பேசும்படியான வல்லமையை இந்த தெய்வீக வரத்தின் மூலம் தந்தருளுகின்றார்.



(மிகுதி அடுத்த இதழில் தொடரும்....)




***கேள்வி :*** **புத்தக வழிபாட்டு ஆராதனை முறையா, சுயாதீன ஆராதனையா?**

***பதில் :*** சர்வ வல்லவரை ஆராதிப்பதே உன்னதமான கிறிஸ்தவ சேவையாகும். தேவ மகிமையைப் பாடும் ஆராதனைக் குழுக்களை எழுப்புவதே நற்செய்திப்பணி மற்றும் மிஷனரி ஊழியங்களின் முடிவான நோக்கமாகும் (ரோமர் 10:14; 15:9-11). புதிய சபையானது ஆராதனையைக் கருத்தாழமும் கிரமமுமானதாக்கும் நோக்கோடு திருச்சபைப் பிதாக்கள் சபை கூடிவருதலில் பயன்படுத்தும்படி துதி ஜெப விண்ணப்பங்களை எழுதிக் கொடுத்தார்கள். ஆனால் நாளாவட்டத்தில் அவை அர்த்தமற்ற கடமையும் வறட்டுச் சடங்காகவும் மாறி விட்டன. இச்சூழலில்தான் A.W.டோசர் என்ற தீர்க்கர் ஆராதனையைத் "திருச்சபை தொலைத்துவிட்ட முத்து" என அழைத்தார். சமீபகாலங்களிலோ உலகெங்கிலும் துதி ஆராதனையின் ஆவி ஊற்றப்பட்டு, மூச்சடைத்துக் கொண்டிருந்த நிலையில் வசந்த காற்று வீசத் துவங்கியுள்ளது. இதில் பரவசமடைந்த கிறிஸ்தவர் பலர் ஜெபப் புத்தகங்கள் பயன்படுத்தி ஆராதிக்கும் பழைய முறையை அப்படியே தூக்கியெறிந்துவிட்டு சுயாதீன ஆராதனை முறையைத் தழுவியுள்ளனர். இது முதியவர்களுக்கும் இளைய தலைமுறையினருக்கும் இடையில் மட்டுமல்ல, புராதன சபைகளுக்கும் புதிய சபைகளுக்கும் இடையிலேயும் ஒருவித இறுக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதைச் சரிசெய்வது எப்படி?

பொது ஆராதனைகளுக்கான ஜெபங்களை திருச்சபையின் முற்காலத்து தலைவர்கள், ஆவியான தேவனின் அபிஷேகத்தோடுதான் இதை எழுதினார்கள். சபைகளை இந்நாட்களில் குதூகல ஆராதனைக்குள் நடத்துபவர்களை எழுப்பியுள்ளதும் அதே ஆவியானவர் தான். ஆனால், இருவகை ஆராதனைகளும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை என்றல்ல, ஒன்றையொன்று மேம்படுத்துபவை என்று ஏற்றுக்கொள்வதே முதிர்ச்சிக்குரிய அடையாளமாகும்.

சமாரிய பெண்ணோடு உரையாடிக் கொண்டிருந்த இயேசு, ஆராதனை என்பது "ஆவியோடும்" அதேவேளையில் "உண்மையோடும்" ஏறெடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தினார் (யோவான் 4:24). சபை கூடுகைகளில் ஆவியின் வரங்களை அப்பியாசிக்கும் வழிமுறைகளை எழுதிய அப்போஸ்தலனாகிய பவுல், ஜெபிப்பதும் பாடுவதும் "ஆவியோடும்" அதேவேளையில் "கருத்தோடும்" இருக்கவேண்டுமென குறிப்பிட்டார் (1கொரி 14:15). புத்தக ஜெபங்களில் கருத்துச்செறிவு அதிகமென்பதில் சந்தேகமேயில்லை; சுயாதீனமாய் ஆராதிக்கும்போது பெரும்பாலும் ஒரு சில கருத்து திரும்பத்திரும்ப வருவதாகவும் வேத வெளிப்பாட்டின் குறுகிய பகுதிகள் பயன்படுத்தப்படுவதாயும் அமைந்து விடுகிறது. அதேவேளையில் புத்தக ஜெபங்களை பயன்படுத்தும்போது ஆராதிப்போரின் உள்ளான உணர்வுகளை விடுதலையோடு வெளிப்படுத்துவது தடைபடுகிறது. ஒன்றுக்கு அடுத்தது தேவை. ஒவ்வொரு வகையினரும் மற்றவரிடமிருந்து கொஞ்சம் சேர்த்துக் கொண்டால்தான் ஆரோக்கிய சமநிலை கிடைக்கும். எந்த வழிபாட்டு முறையும் மற்றதைவிட உயர்ந்ததோ தாழ்ந்ததோ கிடையாது. ஜெபப்புத்தக வழிபாட்டு முறையிலேயே பழக்கப்பட்டவர்கள் இன்றையப் புதிய அலையைப் புத்துணர்வூட்டுவதாய்க் கருதுவதுபோல, சுயாதீன ஆராதனை முறையில் திரும்பத் திரும்ப ஒருசிலவற்றையே சொல்லிக் கருத்தாழமின்றியிருக்கும் நிலையினால் புளித்துப்போய் "பழைய ரசமே நல்லது" என உணரத் துவங்குவதும் உண்டு (லூக்கா 5:39)!

ஆராதனையின்போது மனித உடற்பாவனை கவனிக்கப்படவேண்டியதொன்று. எழுந்து நிற்பது, தலைவணங்குவது மற்றும் முழங்காற்படியிடுவது தவிர வேறு உடற்பாவனைகள் புத்தக ஆராதனை முறைகளைப் பின்பற்றும் சபைகளில் பொதுவாகக் காணப்படுவதே இல்லை. வேதம் போதிக்கும் பிறபாவனைகளான கைகளை உயர்த்துதல் (சங்.134:2; 1தீமோ 2:8), கை தட்டுதல் (சங் 47:1), நடனமாடுதல் (சங். 149:3; 150:4) ஆகியவற்றை மற்றவர்கள் சரளமாக அப்பியாசிக்கின்றனர். வேத வசனங்களுக்கிடையே பாரபட்சம் காட்டுவதைத் தவிர்க்கவேண்டுமானால் முதற்குழுவினர் தங்களது பழக்கவழக்கங்களை விட்டு வெளியேவர வேண்டும். கலாச்சாரத்திற்கு இங்கு இடமுண்டு என்பது

உண்மை. வேத புத்தகம் மத்திய கிழக்கு கலாச்சாரத்தில் எழுதப்பட்டது. மேற்குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு உடற்பாவனையும் எந்தக் கலாச்சாரத்திற்கும் முற்றிலும் முரண்பட்டதாய் தோன்றவில்லை. வெறும் உணர்ச்சி வசம் பக்தி விருத்தியற்றது; ஆனால் நமது அன்பை ஆண்டவருக்கும் உடன் மனிதருக்கும் வெளிப்படுத்திக் காட்டவே உணர்ச்சிகள் தேவனால் நமக்கு அருளப்பட்டுள்ளன (மத்தேயு 22:37-39).

ஆயிரம்பேருள்ள பாடகர் குழுவின் பாடல்களை ரசிக்கும் சிலருக்கு பெந்தெகொஸ்தேயினரின் சத்தமான ஆராதனையைச் சகிக்கமுடியாது. அதனை தெய்வீக ஆராதனைக்கு ஒவ்வாத ஒழுங்கீனமெனக் கருதவும்கூடும். இங்கும்கூட வேதாகமம் இரண்டையுமே செய்யப் போதிக்கிறது. "நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவனென்று அறிந்துகொள்ளுங்கள்" என சங்கீதம் 46:10 கூறுகின்றது. எனினும் அடுத்த சங்கீதமே நம்மை தேவனுக்குமுன்பாக "கம்பீர சத்தமாய் ஆர்ப்பரியுங்கள்" என்றழைக்கிறது (சங்கீதம் 47:1). நம்மைக் "கம்பீரித்துப் பாடு" என்று சகரியா 2:10 அழைக்கிறது; 13ஆம் வசனத்தில் "கர்த்தருக்கு முன்பாக மவுனமாயிருங்கள்" என்று சொல்லப்படுகின்றது. பெந்தெகொஸ்தேயினர் தங்கள் ஆராதனையை இன்னும் கூடுதல் "ஒழுங்கும் கிரமமுமாய்" நடத்தவேண்டுமென்று அறிவுறுத்தும் (1கொரி 14:40) அதேவேளையில் பெந்தெகொஸ்தே அல்லாதவர் தங்களது ஆராதனையை இன்னும் விசையுள்ளதாக்க உற்சாகத்தையும் பரவசத்தையும் கூட்டிக்கொள்ளக் கேட்கிறேன். பரலோகத்தில் அமைதி அபூர்வம் என்பதை எப்பொழுதுமே அமைதியாக ஆராதிப்பவர்களுக்கு நினைப்பூட்டுகிறேன் (வெளி 8:1)! ஆராதனையின் சத்தத்தை மட்டும் வைத்து அதில் உயிர் இருக்கிறது என்று நிரூபிக்கமுடியாது. "கர்த்தரின் ஆவி எங்கே உண்டோ அங்கே விடுதலையுண்டு" என்ற வசனத்தின் சூழலை விட்டு எடுத்து வியாக்கியானம் செய்யாதீர்(2கொரி 3:17). இங்கு விடுதலை என்பது மோசேயின் நியாயப்பிரமாணத்திலிருந்து கிடைக்கும் விடுதலைதானேயொழிய தேவ சமூகத்தில் இஷ்டம் போல் நடந்துகொள்வதற்கான அனுமதியல்ல (வச 14-16). ஆராதனையில் "பய"பக்தியை ஒருபோதும் விட்டு விடக்கூடாது (பிர 5:1,2; 12:28,29).

இசையைக் குறித்து ஒரு வார்த்தை: பழங்காலத்து ஆட்களுக்கு அதிரும் இசையும் வேகமான தாளங்களும் பிடிக்காது. சபைகளில் ஒருமனதைக் காத்துக்கொள்ள முதியவர்களின் உணர்வுகளை மதிக்கவேண்டும். அதேவேளையில், இளம்தலைமுறையினரை இழந்துபோகாதிருக்க முதியவர்கள் சில காரியங்களை பொறுத்துக்கொள்ள வேண்டும். மாற்றம் என்றவுடன் சீற்றம் கொள்ளக்கூடாது.

பெரும்பாலான நவீனகாலப் பல்லவிகள் ஒரு சில கருத்துக்களையே திரும்பத் திரும்ப சொல்லுகின்றன. உபதேச கண்ணோட்டத்திலும் அவைகளுக்கு ஆரோக்கியம் போதாது. பாடல் இயற்றுபவர்கள் தங்கள் பாடல் பல்லவிகளை அரங்கேற்றுமுன் வேதாகமத்தின் இறையியலுடன் உட்கார்ந்து சரிபார்க்கவேண்டும். இறையியல் சத்து, தேவனைப் பற்றிய அறிவு இல்லாத ஆராதனையோ பாடல்களோ தேவனுக்குப் பிடிக்காது (ஓசியா 6:3,6). பரலோகத்திற்குச் சென்ற பின்னரும் நாம் மோசேயின் பழங்கால பாட்டை பாடிக்கொண்டிருப்போம் (வெளி 15:3,4; உபா 32). பழங்காலப் பாமாலை, கீர்த்தனைப் பாடல்களைப் போன்று இறையியல் கருத்துக்கள் நிறைந்த பாடல்கள் இன்று அபூர்வம் (எபே 5:18,19; கொலோ 3:16). அவைகள் விற்பனைக்கான உக்திகளைப் பின்பற்றி, ஏராளம் தலைப்புகளின் மீது இயற்றப்பட்டு வருகின்றன. இவை தேவனை ஒருபோதும் மகிமைப்படுத்தாது.

வெறுமனே "உதடுகளின்" சத்தம் அல்லது "கைகளின்" அசைவு என்றில்லாது ஆராதனையானது "இருதயத்திலிருந்து" எழுந்து வருமானால் அது எவ்வித மான ஆராதனை முறையென்றாலும் சரி, அதிலே சந்தோஷமாய்ப் பங்குபெற தயங்கக்கூடாது (ஏசா 29:13; 1:15).

## *கேள்வி :* கிறிஸ்தவ தலைவர்கள் தமக்குப் பட்டங்களைப் பயன்படுத்துவது சரியா?

***பதில் :*** எல்லாவிதச் சபைப் பிரிவுகளோடும் இணைந்து பணியாற்றும்போது இக்கேள்விக்குப் பதில் சொல்வது கடினமானது. ஆனாலும் "தெளிவான" பதில்களைக் நாம் கொடுக்கவேண்டியுள்ளது.

பழைய ஏற்பாட்டுக் காலத்திலுள்ள சபைக்கும் அதன் உறுப்பினருக்கும் ஊழியருக்கும் இடையே பல வேறுபாடுகள் இருந்தது. தீர்க்கதரிசிகள், ஆசாரியர், இராஜாக்கள் மட்டுமே அபிஷேகிக்கப்பட்டனர். ஆனால் புதிய உடன்படிக்கையின் கீழ் பரிசுத்த ஆவியானவர் "மாம்சமான யாவர் மீதும்" -(அதாவது தேவ மக்கள் யாவர் மீதும் - "குமாரர், குமாரத்திகள், வாலிபர், வயோதிபர் (மூப்பர்), ஊழியக்காரர், ஊழியக்காரிகள்") இறங்கி வருகிறார் (அப் 2:16-18). கிறிஸ்துவுக்குள்ளான விசுவாசிகள் அத்தனை பேரும் இன்றும் நித்தியத்திலும் தேவனுக்கு முன்பாக இராஜாக்களும் ஆசாரியர்களுமாய் இருக்கின்றனர் (1பேது.2:9; வெளி.1:4-6) ஆசாரியர், ஆசாரியரல்லாத சாதாரண மக்கள் என்று இன்று இரு வகுப்பினர் கிடையாது. தேவ மக்கள் அனைவரும் ஆசாரியரே. ஒவ்வொரு விசுவாசியும் பல்வேறு பொறுப்புகளும், வரங்களும் பெற்று தேவனுக்கும் மனிதருக்கும் பணிவிடைசெய்யும் ஊழியக்காரர்களாக உள்ளனர்.

புதிய உடன்படிக்கை அமுலுக்கு வருமுன்னரே யூத தேவாலய பழக்கவழக்கங்களான தனிப்பட்டங்கள், வித்தியாசமான உடைகள் ஆகியவை பயன்படுத்துவதற்கு எதிராக இயேசு பேசினார் (மத் 23:1-10). அவரது விளக்கம் இதுவே: "பரலோகத்திலிருக்கிற ஒருவரே உங்களுக்குப் பிதாவாயிருக்கிறார். நீங்களெல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள்." இக்காரியத்தில் கிறிஸ்துவின் வார்த்தைகளே முடிவானவை. அதை மாற்றத்

துணியாதிருப்போம்.

கிறிஸ்துவின் போதனைகளை ஆதி சபையில் அப்போஸ்தலர்கள் அப்படியே பின்பற்றினர். Rev. பால் என்றோ Rt.Rev. பீட்டர் என்றோ Father ஜான் என்றோ நடபடிகளிலோ நிருபங்களிலோ நாம் வாசிப்பதில்லை. பேதுரு, பவுலை வெறுமனே "சகோதரன் பவுல்" என்றே அழைத்தான் (2பேதுரு 3:15). "Reverend" என்றால் "அவருடைய" நாமம் (Holy and Reverend are His Name!) (சங்கீதம் 111:9). இன்று அநேக ஊழியர்கள் பட்டங்களுக்காக தவமிருக்கின்றார்கள். வெட்கம்! மனிதப் பாரம்பரியத்தைத் தழுவி பட்டங்களின் பின்னால் நாம் சென்றுவிடக்கூடாது. யோவானுக்கு வெளிப்படுத்தலைக் கொண்டுவந்த தூதன் கூட தன்னை ஒரு சகோதரன் என்றே அறிமுகப்படுத்தினான் (வெளி 19:10; 22:9).

புதிய ஏற்பாட்டுச் சபை கட்டமைப்பை விட்டு மனித ஆளுகை முறைகளுக்குள் சபை திசைதிரும்பிச் சென்றபோதுதான் குருத்துவப் பட்டங்கள் கொடுக்கப்பட்டன. மாபெரும் சீர்திருத்தத்தையடுத்து திருச்சபை முற்றிலுமாக புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்திற்குத் திரும்பி வந்துவிட்டதென கூறமுடியாது. இன்னும் சொல்லப் போனால், சீர்திருத்தம் இன்னும் முற்றுப்பெறவில்லை. சீர்திருத்தத்திற்காக எடுத்துவைக்கவேண்டிய ஒவ்வொரு அடியும் வேதனையுள்ளது, கிரயம் மிக்கது. இதுதான் சபைத் தலைவர்களுக்குக் கொடுக்கப்பட்ட அழைப்பு. "நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாய் என்பதை நினைத்து மனந்திரும்பு. இல்லாவிட்டால்..." (வெளி 2:5)

ஊழியப் பிரதிஷ்டை என்பது ஒரு குறிப்பிட்ட பணிக்கு ஒரு குறிப்பிட்ட நபரை பிரத்தியேகமாக நியமிப்பதுதானேயொழிய அது ஒரு பட்டமளிப்பு விழா அல்ல (அப். 13:2,3; தீத்து 1:5). உதாரணமாக, அந்தியோக்கியாவின் உள்ளூர் சபையில் தீர்க்கதரிசிகளாகவும் போதகர்களாகவும் இருந்த பவுலும் பர்னபாவும் பரந்த வெளியுலக ஊழியத்திற்காகப் பிரதிஷ்டை செய்து பிரிக்கபட்டபோது அப்போஸ்தலரென்று அழைக்கப்படலாயினர் (அப்.13:1; 4:14). அப்போஸ்தலன் பவுல், சுவிசேஷகன் பிலிப்பு, மேய்ப்பர் தீமோத்தேயு என்றெல்லாம் சொல்லலாம். ஏனெனில் இவைகள் வேதாகம அங்கீகாரம் பெற்ற ஊழியப் பெயர்கள்.

சில பிரசங்கிமாருக்கு இப்பொழுது டாக்டர், ரெவரண்ட், பாஸ்டர் போன்ற பட்டங்களின்மீது ஆசை, பைத்தியம் பிடித்திருக்கிறது. பட்டங்கள் எவரையும் பெரியவராக்கிவிடாது. குருத்துவப் பட்டங்களை வைத்திருந்தும் சபைச் சரித்திரத்தில் தேவனால் வல்லமையாகப் பயன்படுத்தப்பட்ட பலருண்டே என்று நீங்கள் விவாதிக்கலாம். "அறியாமையின் காலங்களின்" பழக்க வழக்கங்களைத் தொடர்வதற்கு இது காரணமாகாது. தேவன் பொறுத்துக் கொண்டாரென்றால் அவர் அதை ஆமோதித்தார் என்று பொருள் ஆகாது. பழைய துருத்திகளை எவ்வளவு சீக்கிரம் தூக்கி எறிகிறோமோ அவ்வளவுக்கதிகமாக புதிய இரசத்தின் ஆசீர்வாதங்களை நாம் பருகமுடியும்.

## *கேள்வி :* கத்தோலிக்கர் அபிஷேகம் பெற்றோம் என்று சொல்வதெப்படி?

*பதில் :* பெந்தெகொஸ்தே நாளன்று துவங்கிய ஆவியின் கடைசிக்கால அருள்மாரி நாம் கடைசிக்காலத்தின் இறுதி நோக்கி வரவர அதிகரித்துகொண்டே வருகிறது. யோவேலின் தீர்க்கதரிசன வாக்கிலுள்ள "மாம்சமான யாவர் மீதும்" என்பது எல்லா நாட்டினரையும் சபைப் பிரிவினரையும் உள்ளடக்கியுள்ளது (அப் 2:17). பரிசுத்த ஆவியானவர் மூலம் தேவன் இன்று நடப்பித்துவரும் காரியங்களால் பாதிக்கப்படாத சபைப்பிரிவு எதுவும் கிடையாது. ரோமன் கத்தோலிக்க சபையும் அதற்கு விதிவிலக்கல்ல. பாதிரியார்கள் உட்பட பல்லாயிரக் கணக்கான கத்தோலிக்கர்கள் தாங்கள் ஆவியின் அபிஷேகம்பெற்று, அந்நிய பாஷைகளில் பேசி வரங்களை அப்பியாசிப்பதாய்ச் சாட்சியிடுகின்றனர். பல புராட்டஸ்டண்டு கிறிஸ்தவர்களுக்கு இதை ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை. இன்னும் கத்தோலிக்கராக இருந்துகொண்டு ஆவியின் அபிஷேகம் பெற்றிருக்கிறேன் என்று எப்படி அவர்கள் சொல்ல முடியுமென்பது அவர்களது கேள்வி.

தேவன் ஏகாதிபத்தியர். இங்குதான் நாம் துவங்கவேண்டும். அவர் எதையும் செய்யலாம். கொர்நேலியுவுக்கு அவர் செய்தது போன்றது சபைச் சரித்திரத்தில் பலமுறை நடந்திருக்கிறது. கொர்நேலியு ஒரு கிறிஸ்தவனல்ல. ஆனால் அவன் "தேவ பக்தியுள்ளவனும்... தேவனுக்கு பயந்தவனும்... மிகுந்த தர்மங்களைச் செய்து, எப்பொழுதும் ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தவனுமாய்" இருந்தான் (அப்.10:2). தனக்கு கிடைத்திருந்த வெளிச்சத்தின்படி நடந்துவந்தான். பாரபட்சமற்ற தேவன் பிரசங்கியார் பிரசங்கத்தை முடிக்குமுன்னரே, அவன் திருமுழுக்கு பெறுமுன்னரே, அவன் மீதும் அவன் குடும்பத்தார்மீதும் தமது ஆவியைப் பொழிந்துவிட்டார் (அப். 10:34, 44-46). அப்படியே தேவ பக்தியுள்ளவர்களும் சிருஷ்டி கர்த்தாவைத் தொழுதுகொள்ளுகிறவர்களுமாகிய கத்தோலிக்கர் மீது தேவன் ஆவியைப் பொழிந்தருளுவாரானால் "தேவனை தடுக்கிறதற்கு நாம் எம்மாத்திரம்?" (அப் 11:17).

தேவாசீர்வாதங்கள் இறங்குவதால் நமது முறைகள் ஆமோதிக்கப்பட்டுவிட்டன என்றும் சொல்லிவிடமுடியாது. கிறிஸ்தவ வாழ்வின் துவக்க அனுபவத்தில் பொதுவாக முதலாவது வருவது மனந்திரும்புதல், அடுத்து திருமுழுக்கு, பின்னர் பரிசுத்தஆவியானவரைப் பெறுதல் (அப் 2:38). கொர்நேலியுவைப் பொறுத்தவரை மூன்றாவது வரவேண்டியது இரண்டாவதற்கு, அதாவது தண்ணீர் ஞானஸ்நானத்திற்கு முன், ஆவியானவரைப் பெற்றக்கொண்டாலும், தண்ணீர் ஞானஸ்நானம் தேவையில்லையென்று யாரும் சொல்லவில்லை. மாறாக, அவர்களுக்கு உடனே ஞானஸ்நானம் கொடுக்கும்படி பேதுரு கட்டளையிட்டான் (அப்.10:47,48) நியாயந்தீர்க்கும் மனப்பான்மையில்லாத இவ்வித சாதகக் கண்ணோட்டம் கத்தோலிக்க நண்பர்களை முழுச் சத்தியத்தையும் தழுவிக்கொள்ள ஊக்குவிக்கும்.

புராட்டஸ்டண்டு கிறிஸ்தவர்கள் கத்தோலிக்க மார்க்கத்தை விட்டு வெளியே வந்துவிட்டாலும் உலகத்தை விட்டு வெளியேவரவில்லை. சிலுவை உருவத்தை வணங்குபவர்களும் அதை வைத்திருப்ப வர்களும் இருக்கத்தானே செய்கின்றார்கள். அப்படி யாயின் அனைத்து விசுவாசிகளும் ஆசாரியர் என்பது ஏட்டுச் சுரைக்காய்தான். இன்றும் விசுவாசிகளைக் குருக்கள் (ஆசாரியர்), சபையார் (விசுவாசி) என்று வெகுவாய்ப் பிரிக்கிறோம். ஆதிச்சபையில் புதிய ஏற்பாட்டு ஊழியர் அறியாதிருந்த பட்டங்களும் சிறப்பு ஆடைகளும் நம்மிடையே ஏராளம். இரட்சிப்பு கிரியை களினாலல்ல, கிருபையினால்தான் கிடைக்கின்றது என்பது தெளிவு. அப்பம் பிட்குதலில் அப்பப்பா எத்தனை சடங்கு. எத்தனை விதங்கள்!

ரோமன் கத்தோலிக்கர்கள் மரியாளை மத்திய ஸ்தராய் வைத்து அவளிடம் அல்லது அவள் மூலம் ஜெபிக்கின்றனர். புராட்டஸ்டண்டு கிறிஸ்தவர்கள் பிரசங்கிமாரை மத்தியஸ்தர்களாய்ப் பயன்படுத்துகின்ற னர். இரண்டுமே தேவனுக்கு அருவருப்புதான். அன்று ஆலயங்களும் மடங்களும் கட்ட தேவையான பணத் தைப் பெற போப்பாண்டவர் பாவமன்னிப்புச் சீட்டுகளை விற்றதுபோல சுகமளிக்கும் ஊழியர்கள் பலர், ஜெப வியாபாரம் செய்கின்றனர். கத்தோலிக்கர் சிலைகளுக்கு மெழுவர்த்தி ஏற்றுவதுபோல, படங்களுக்கு மாலையிடு கிறோம். ஒன்று முப்பரிமாண விக்கிரக ஆராதனை; அடுத்தது இரு பரிமாண விக்கிரக ஆராதனை, அவ்வளவுதான் வித்தியாசம்! "கத்தோலிக்கருக்கு ஒரே போப். புராட்டஸ்டண்டுகாரர்களுக்கு எத்தனையோ?" என்றார் ஒருவர். இப்படி அடுக்கிக்கொண்டே போகலாம். இப்படிச் சொல்வது கத்தோலிக்கர் செய்வதைச் சரி என்று சொல்ல அல்ல; புராட்டஸ்டண்டுகாரர்களை தங்கள் வீட்டைச் சரிசெய்ய அழைக்கவே! இருதிறத்தா ருக்கும் தேவனருளும் செய்தியாவது: "அறியாமையின் காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ எங்குமுள்ள மனிதரெல்லாம் (இரு வகுப்பினரும்) மனந்திரும்ப (மாற்றிக்கொள்ள) வேண்டு மென்று கட்டளையிடுகிறார்" (அப் 17:30).

நமது கத்தோலிக்க நண்பர்களிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியவை ஏராளமுண்டு. ஐயகோ, புராட்டஸ்டண்டு மார்க்கத்தில் எத்தனை பிரிவுகள், பிரிவுகளுக்குள் பிரிவுகள்! கத்தோலிக்கப் பாதிரிகள் மற்றும் கன்னியாஸ்திரீகளின் அர்ப்பணிப்பு மற்றும் ஒழுங்கு ஒரு மாபெரும் சவால். ஊழல் மிகமிகக் குறைவு. அவர்கள் தேவாலயத்தின் சொத்துக்களை விற்பதில்லை, பணத்தைச் சுரண்டுவதில்லை. சபைச் சொத்து எதுவும் பாதிரியாரின் தனிப்பெயரில் வாங்கப் படுவதில்லை. அவர்கள் வரவு கணக்கு விபரங்கள் அவ்வளவு சுத்தமாயிருப்பதால் வருமானவரி அதிகாரி களுக்கு அவர்கள் லஞ்சம் கொடுக்கத் தேவையில்லை. வேத மொழியாக்கங்களை மேம்படுத்துவதில் அவர்கள் நம்மை மிஞ்சுபவர்கள். கிறிஸ்தவர் அல்லாதோரைச் சந்திக்கும் நோக்கோடு அவர்கள் வேதத்தை இன்றைய நடைமுறை மொழிநடையில் கொண்டுவர அத்தனை

**தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தை மறந்துவிடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவரல்லவே!**

யையும் செய்வார்கள். சமூக சேவையில் அவர்களை யாரும் தோற்கடிக்க முடியாது. அவர்கள் தங்களது கட்டிடங்களையும் வளாகங்களையும் எப்படி வைத்தி ருக்கிறார்கள் என்பதைப் பார்த்தால் நாம் தலைகுனிய நேரிடும். ஆலய ஆராதனைகளில் பக்திவிநயந்தான் என்னே! அவர்களது இத்தனை அன்பின் பிரயாசங்க ளையும் செயல்களையும் மறந்துவிட தேவன் அநீதி யுள்ளவரல்லவே! (எபி 6:10). அவருக்குப் பயந்து யார் நீதியைச் செய்தாலும் அவர் அங்கீகரிக்கிறார் (அப். 10:34,35). கத்தோலிக்க சபைக்கு வரும் தேவனது தொடுதலுக்காய், சந்திப்பிற்காய் அவரைத் துதிப்போம்.

பரிசுத்த ஆவியானவர் எல்லா சத்தியத்திற்குள் ளும் நம்மை நடத்துவாரென்றார் இயேசு (யோ 16:13). இது ஒரேநாளில் நடந்துவிடாது. வெளிப்பாடுகளும் சீர்திருத்தங்களும் படிப்படியாகத்தான் வரும்.

முடிவாக, அபிஷேகம் பெற்றுள்ள கத்தோலிக்க ருக்கு எனது அறிவுரைகள்:

(1) வேதத்தைக் கிரமமாகவும் கவனமாகவும் வாசியுங்கள். புதிய ஏற்பாட்டில் துவங்குங்கள்.

(2) கிறிஸ்து கட்டளையிட்டபடி திருமுழுக்கு பெற்றுக் கொள்ளுங்கள்.

(3) மரியாளிடமோ மரியாள் மற்றும் பரிசுத்தவான்கள் யார் மூலமோ ஜெபிப்பதை நிறுத்துங்கள். பிதாவாகிய தேவனின் நேரடியாக குமாரனாகிய இயேசு கிறிஸ்து வின்மூலம் ஜெபியுங்கள்.

(4) சிலைகளைக் கும்பிடாதீர்கள். எப்பாணியிலும் சிலை வணக்கம் வேண்டாம்.

(5) வேதத்தை உத்தமமாய்ப் பிரசங்கிக்கும் சபையொன்றின் ஆராதனையில் கலந்துகொள்ளுங்கள்.

(6) நற்செய்திப் பணிக்காய்ப் புறப்பட்டுச் செல்லும் குழுக்களோடு சேர்ந்துகொள்ளுங்கள்.

(7) தேவையுள்ளோர் மற்றும் சந்திக்கப்படாதோர் நடுவில் நடைபெறும் மிஷனரி ஊழியம் மற்றும் சமூக நலப்பணிகளுக்கு உதவுங்கள். "உங்களில் நற்கிரியை யைத் தொடங்கினவர் அதை இயேசு கிறிஸ்துவின் நாள்பரியந்தம் முடிய நடத்திவருவார்" (பிலிப்பியர் 1:5).

**(இக் 'கேள்வி பதில்' டாக்டர் ஆர்.ஸ்டான்லி அவர்களின் 'தெளிவான பதில்கள்' என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது. ஆவிக்குரிய வாழ்க்கை, வேதாகமம், நடைமுறை வாழ்க்கை சம்பந்தமான உங்கள் கேள்விகளை 'கேள்வியும் பதிலும், சத்தியவசனம், த.பெ. 1012 கொழும்பு' என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்)** ❑




**நாமும் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூரக் கடனாளிகளாயிருக்கிறோம்.**



அன்பு சிறார்களே,

மேலேயுள்ள படத்தை அழகிய வர்ணத்தால் நிறந்தீட்டி மகிழ்வதோடு நின்றுவிடாமல், "அன்பு" என்ற தலைப்பில் உங்கள் கவிதை, கதை, துணுக்குகளை அனுப்பிவையுங்கள்.

உங்கள் அழகிய ஆக்கங்களை 2011 அக்டோபர் 15ம் திகதிக்குமுன் அனுப்பிவைக்கவேண்டிய முகவரி:

**சிறுவர் சோலை,**

***P.O.Box 1012,***

***Colombo.***

கடந்த இதழ்களில் தங்கள் ஆக்கங்களை எழுதியவர்களின் பெயர்களின் பட்டியலை அடுத்த இதழில் எதிர்பாருங்கள்.



# இயேசுவோடு வாழ்வேன்

*'தேவனுடைய கிருபை வரமோ, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்' (ரோமர் 6:23)*

"அம்மா! 'என்றென்றும்' என்று சொன்னால், அது எவ்வளவு காலம்" என்று கேட்டாள் குட்டிப்பிள்ளை மேரி. அவளால் அந்த வார்த்தையின் அர்த்தத்தை புரிந்துகொள்ள முடியவில்லை. அம்மா சிறிது நேரம் யோசித்து விட்டு "என்றென்றும் என்றால் எந்தக்காலமும் அல்லது எப்பொழுதும் என அர்த்தம்" என்று கூறினாள்.

"அதைத்தான் நித்தியம், சதாகாலம் என்று சொல்வார்கள் இல்லையா அம்மா" என்றாள் விபரமறிந்த மேரியின் அக்கா. "ஆம்" என்ற அம்மா, வேதம் சொல்லுகிறது: "தேவனுடைய கிருபை வரமோ இயேசுகிறிஸ்துவினால் உண்டாகும் நித்திய ஜீவன் என்று. அதாவது இயேசு சுவாமி நித்தியமான ஒரு வாழ்க்கையை எமக்குத் தருகிறார். அதுதான் முடிவே இல்லாமல் எந்தகாலமும் இயேசு சுவாமியுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு வாழ்க்கை" என்றார் அம்மா.

"அப்படியென்றால் நாம் மரித்த பிற்பாடும் எந்த காலமும் இயேசு சுவாமியோடு கூடவே இருப்போமா அம்மா?" என்றாள் மேரி.

"ஆம், இயேசு சுவாமி நம் உள்ளத்திற்குள் வந்த நேரத்திலிருந்து நாம் இயேசு சுவாமியோடு கூட வாழ ஆரம்பித்து விடுகிறோம்."

"ஆனால், நாம் இன்னும் மோட்சத்துக்குப் போகவில்லை. நாம் மரித்த பிறகுதான் அங்கு போகலாம் என்று எங்களுடைய ஆசிரியர் சொன்னார்" என்றாள் மேரியின் அக்கா.

"ஆம், பரலோகம் என்பது நாம் இயேசுவோடுகூட இருப்பதைக் குறிக்கிறது, அவர் நமது உள்ளத்திற்குள் இருக்கும்போது இங்கேயே பரலோகம் ஆரம்பமாகி விடுகின்றது. அவருடைய பிள்ளையாயிருப்பவர்கள் மரித்த பின்னர் பரலோக ராஜ்யத்திற்குள் கொண்டு செல்லப்படுகின்றனர்" என்று அம்மா விளங்கப்படுத்தினார்கள்.

"அப்படியானால், நித்திய ஜீவன் என்பது பரலோகமா?" என்று கேட்டாள் மேரியின் அக்கா.

"ஆம், இயேசுகிறிஸ்துவின் மூலமாய் எமக்கு இந்த நித்திய ஜீவனைக் கொடுத்திருக்கும் நம்முடைய ஆண்டவருக்கு நாம் நன்றி கூற மறக்கலாகாது. வேத புத்தகம் சொல்லுகிறது இயேசு கிறிஸ்துவை நம்பி இருதயத்தில் ஏற்றுக் கொள்ளுகிறவர்களுக்குத்தான் இந்த நித்திய ஜீவன் என்று சொல்லப்படுகிற பரலோக வாழ்வு கிடைக்கும்" என்று கூறினார்.

ஆம் அருமை தம்பி தங்கையரே, இந்த இயேசு சுவாமியோடு வாழுகிற வாழ்க்கையைத் தான் நாம் அனைவருமே பெற்றுக்கொள்ள வேண்டுமென்பது அவருடைய விருப்பம். இயேசு சுவாமி இந்த உலகத்தில் மனிதனாக பிறந்துவந்து எம்முடைய பாவங்களுக்காக மரித்திராவிட்டால், நாம் அவரோடு வாழுகின்ற இந்த வாய்ப்பு எமக்கு கிடைத்திராது. ஏனென்றால் பாவத்தோடு இயேசு சுவாமியை நெருங்கமுடியாது. ஆனால் அவர் சிலுவையில் சிந்திய தம்முடைய இரத்தத்தினால் எம்மைக் கழுவி எமது பாவத்தை மன்னிக்கும்படி ஜெபிக்கின்ற அனைவருக்கும் என்றென்றும் அவரோடு வாழுகிற நித்திய ஜீவன் கிடைக்கும். இன்றே ஜெபிப்பீர்களா?

ஜெபம்: அன்பின் இயேசு சுவாமி, நீர் தருகின்ற நித்திய ஜீவனை சுதந்தரித்துக்கொள்ள, இப்பொழுதே என் பாவங்களை மன்னித்து, உமது பிள்ளையாக என்னை ஏற்றுக்கொள்ளும். ஆமென். ❑

# மணமகன் விபரம்

(2011/E.M/3116) வயது 27, உயரம் 5'5". இரட்சண்ய சேனை, க.பொ.த(சா/த), கற்று, முச்சக்கர வண்டி ஓட்டுனராக தொழில்புரியும் மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர். (கொழும்பு 13).

▸ ▸ ▸

(2011/E.M/3117) வயது 27, உயரம் 5'10". கெத்சமனே சுவிசேஷ சபை, Engineer ஆக கடமையாற்றும் Bsc பட்டதாரியான மணமகனுக்கு, படித்த அழகான மணமகளைத் தேடுகின்றனர். (கொச்சிக்கடை).

▸ ▸ ▸

(2011/E.M/3118) வயது 35, உயரம் 5'2". கல்வாரி சபை. Diploma in English, Diploma in Education கற்று ஆசிரியராக கடமையாற்றும் மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர். (அங்கொடை).

▸ ▸ ▸

(2011/E.M/3119) வயது 37, உயரம் 5'10". Kings Rivaival சபை, தற்போது வங்கியில் Assistant Manager ஆக கடமையாற்றும் மணமகனுக்கு மணமகளைத் தேடுகின்றனர். யாழ்ப்பாணம் விரும்பத்தக்கது. (கல்கிஸ்சை).

▸ ▸ ▸

(2011/E.M/3120) வயது 27, உயரம் 5'6". Christadelphians சபை, க.பொ.த(உ/த) கற்று தனியார் துறையில் பணியாற்றும் மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர். (வத்தளை).

▸ ▸ ▸

(2011/E.M/3121) வயது 23, உயரம் 5'3". க.பொ.த(உ/த) R.C சபை. Diploma in English, IT கற்று, தற்போது வெளிநாட்டு வேலைவாய்ப்பாளராக கடமையாற்றும் மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர். (கொழும்பு 9).

▸ ▸ ▸

(2011/E.M/3122) வயது 31, உயரம் 5'2". Light House சபை, க.பொ.த(உ/த) Accounts கற்று, Clerk ஆக வெளிநாட்டில் கடமையாற்றும் மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர். (கம்பளை).

▸ ▸ ▸

(2011/E.M/3123) வயது 29, உயரம் 4'6". Light House சபை, 5ம் தரம்வரை கற்று வங்கியில் பியூனாக கடமையாற்றும் மணமகனுக்கு, இரட்சிக்கப்பட்ட மணமகளைத் தேடுகின்றனர். (கம்பளை).

▸ ▸ ▸

(2011/E.M/3124) வயது 31, உயரம் 5'2". A.O.G சபை, க.பொ.த(உ/த), Travel Agency இல் கடமையாற்றும் மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர். (வத்தளை).

▸ ▸ ▸

(2011/E.M/3125) வயது 30, உயரம் 5'6". A.O.G சபை, க.பொ.த(உ/த) CIMA, Computer Hardware Engineering கற்று, Accountant ஆக கடமையாற்றும் மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர். (கேகாலை).

▸ ▸ ▸

(2011/E.M/3126) வயது 34, உயரம் 5' 4.5". Anglican சபை, க.பொ.த(உ/த) கற்று, Graphic Designar ஆக தனியார் நிறுவனமொன்றில் கடமையாற்றும் மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர். (வத்தளை).

▸ ▸ ▸

(2011/E.M/3127) வயது 28, உயரம் 5'6". Kings Rivaival சபை, க.பொ.த(சா/த) கற்று, Sales Executive ஆக பணியாற்றும் வெளிநாடொன்றில் இசை ஊழியத்திலும் ஈடுபட்டுள்ள மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர். (மொரட்டுவை).

▸ ▸ ▸

---

**ஏதேன் நிபந்தனைகள் :**

🔔 ஏதேனில் வெளிவரும் விளம்பரங்களில், "உங்களுக்கு பொருத்தமானது என நீங்கள் நினைக்கும் விளம்பரத்திற்கான தகவல்கள்" தேவைப்படின், "உங்கள் பெயர் முகவரி, தொலைபேசி போன்ற விபரங்களை விளம்பர இலக்கத்துடன்" தெளிவாக குறிப்பிட்டு அதற்கான முத்திரை உடன் எமக்கு அனுப்பிவைக்கலாம். வெளிநாட்டு விண்ணப்பங்களுக்கு உரிய தபால் செலவை அவர்களே பொறுப்பேற்கவேண்டும்.

🔔 நாம் உங்கள் விபரங்களை, விளம்பரம் கொடுத்தவருக்கு அனுப்பிவைப்போம். அவர்கள் விரும்பினால் மட்டுமே தொடர்பு கொள்வார்கள்.

🔔 இப் பகுதியில் வெளியாகும் நபர்களைப் பற்றியோ அல்லது கொடுக்கப்படும் விபரங்களின் உண்மைத்தன்மை குறித்தோ சத்தியவசனம் உறுதிப்படுத்தவோ பொறுப்பேற்கவோ மாட்டாது.

🔔 உங்கள் பிள்ளைகளின், உறவினர்களின் விபரங்கள் இப்பகுதியில் சேர்க்கப்பட வேண்டுமானால், அதற்கான விண்ணப்பப் படிவங்களை எமக்கு எழுதி பெற்றுக்கொள்ளவும்.

🔔 உங்கள் விபரங்கள் சுருக்கமாகவும் தெளிவாகவும் தரப்படாவிடில் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். சொத்து, சீதனம், குலம் பற்றிய விபரங்கள் அதில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது.




🔔 உங்கள் விபரங்களை சஞ்சிகையில் பிரசுரிக்க விரும்பினால், உரிய விண்ணப்பப்படிவத்தினை நிரப்பி, 2011 அக்டோபர் மாதம் 15ம் திகதிக்கு முன் எமக்கு வந்து கிடைக்கும்படி அனுப்பிவைக்கவும். தாமதமாக கிடைக்கும் விபரங்கள் அடுத்த சஞ்சிகையில் சேர்த்துக்கொள்ளப்படும்.

🔔 இச்சேவைக்கு எவ்வித கட்டணமும் அறவிடப்பட மாட்டாது. இது சேவை நோக்கத்துடன், உங்கள் நன்மைக்காகவே செய்யப்படுகிறது.

🔔 இதன் மூலம் பிரச்சனைகள் ஏதும் எழுமாயின், அதனை சம்பந்தப்பட்டவர்களே தீர்த்துக்கொள்ள வேண்டும். அதற்கு சத்தியவசன ஊழியர்களோ சத்தியவசன ஊழியமோ எந்தவிதத்திலும் பொறுப்பேற்க மாட்டாது.

சகல விபரங்களுக்கும் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

**"ஏதேன்"**

**த.பெ.1012, கொழும்பு, இலங்கை.**

# மணமகள் விபரம்

(2011/E.F/2251) வயது 33, உயரம் 5'3". கெத்சமனே சுவிசேஷ சபை, க.பொ.த(சா/த) சிங்கள மொழியில் கற்ற மணமகளுக்கு, நிரந்தர தொழில்புரியும் இரட்சிக்கப்பட்ட மணமகனைத் தேடுகின்றனர். (அவிசாவளை).

▸ ▸ ▸

(2011/E.F/2252) வயது 44, உயரம் 5'. A.O.G சபை, க.பொ.த(சா/த) சிங்கள மொழியில் கற்று, சிறுவர் ஊழியத்தில் ஈடுபட்டுள்ள மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (கொழும்பு 15).

▸ ▸ ▸

(2011/E.F/2253) வயது 42, உயரம் 4'11". மெதடிஸ்த திருச்சபை, க.பொ.த(உ/த) கற்ற மணமகளுக்கு, உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் மணமகனைத் தேடுகின்றனர். (2-3 வயது குறைந்தவரும் பரவாயில்லை) (பருத்தித்துறை).

▸ ▸ ▸

(2011/E.F/2254) வயது 26, உயரம் 5'4". மெதடிஸ்ட் சபை, க.பொ.த(உ/த) கற்று, தொலைகாட்சி நிலையத்தில் பணியாற்றியவாறே மனவள ஆலோசகராக கடமையாற்றும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (நேபொட).

▸ ▸ ▸

(2011/E.F/2255) வயது 24, உயரம் 5'. அங்கிலிக்கன் சபை, க.பொ.த(உ/த) கற்று, தையல் தொழில்புரியும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (மஸ்கெலிய).

▸ ▸ ▸

(2011/E.F/2256) வயது 32, உயரம் 5'2". R.C, க.பொ.த(உ/த) கற்று, Accounts Clerk ஆக கடமையாற்றும் மணமகளுக்கு, உயர் உத்தியோகத்திலுள்ள மணமகனைத் தேடுகின்றனர். (கண்டி).

▸ ▸ ▸

(2011/E.F/2257) வயது 40, உயரம் 5'1". அங்லிக்கன் சபை, க.பொ.த(உ/த) கற்று, அரசாங்க ஆசிரியையாக கடமையாற்றும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (மாத்தளை).

▸ ▸ ▸

(2011/E.F/2258) வயது 33, உயரம் 5'3". All Saint சபை. க.பொ.த(உ/த) English Dip, Insurence Dip, Computer Dip கற்று, Insurence Executive ஆக கடமையாற்றும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (கொழும்பு 8).

▸ ▸ ▸

(2011/E.F/2259) வயது 38, உயரம் 5'2". அங்லிக்கன் சபை, க.பொ.த(சா/த) Dip in English, Computer Graphic & Designing கற்று, Administration Executive ஆக கடமையாற்றும் மணமகளுக்கு, தொழில்புரியும் ஆங்கிலம் தெரிந்த மணமகனைத் தேடுகின்றனர். (வத்தளை).

▸ ▸ ▸

(2011/E.F/2260) வயது 24, உயரம் 5'5". A.O.G சபை. க.பொ.த(உ/த) சிங்கள மொழியில் கற்று தற்போது Nursary ஆசிரியையாக பணிபுரியும் மணமகளுக்கு, திருச்சபையில் ஈடுபாடுள்ள மணமகனைத் தேடுகின்றனர். (களுத்துறை).

▸ ▸ ▸

(2011/E.F/2261) வயது 27, உயரம் 5'7" பெந்தகோஸ்தே சபை, Business Managment கற்று, தொழில்புரியும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (கனடா).

▸ ▸ ▸

(2011/E.F/2262) வயது 24, உயரம் 5'2". நாற்சதுர சுவிசேஷ சபை. க.பொ.த(சா/த) கற்று, ஊழியம் செய்யும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (கொழும்பு 8).

▸ ▸ ▸

(2011/E.F/2263) வயது 42, உயரம் 5'2". கெத்சமனே சுவிசேஷ சபை, க.பொ.த(உ/த) கற்று, NGOவில் கடமையாற்றும் மணமகளுக்கு, ஐரோப்பிய குடியுரிமையுள்ள வெளிநாட்டு மணமகனைத் தேடுகின்றனர். (கொழும்பு 5).

▸ ▸ ▸

(2011/E.F/2264) வயது 40, உயரம் 5'3". கெத்சமனே சுவிசேஷ சபை, I.A.B கற்று கணக்காளராக கடமையாற்றும் மணமகளுக்கு, உத்தியோகத்திலுள்ள மணமகனைத் தேடுகின்றனர். (கொழும்பு 5).

▸ ▸ ▸

(2011/E.F/2265) வயது 34, உயரம் 5'. A.O.G சபை. க.பொ.த(சா/த), Beauty Culture கற்று, Beauty Paler இல் தொழில்புரியும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (வத்தளை).

▸ ▸ ▸

(2011/E.F/2266) வயது 26, உயரம் 5'. A.O.G சபை, க.பொ.த(உ/த) ICT diploma கற்று, வங்கியில் கடமையாற்றும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (கேகாலை).

▸ ▸ ▸

(2011/E.F/2267) வயது 37, உயரம் 5'. A.O.G சபை, க.பொ.த(சா/த) Accounts கற்று, Accountant ஆக கடமையாற்றும் மணமகளுக்கு, இரட்சிக்கப்பட்ட மணமகனைத் தேடுகின்றனர். (கொழும்பு 8).

▸ ▸ ▸

(2011/E.F/2268) வயது 26, உயரம் 5'2". புதிய உடன்படிக்கை சபை, க.பொ.த(சா/த) கற்று, Sales girl ஆக தொழில் புரியும் மணமகளுக்கு, இரட்சிக்கப்பட்ட மணமகனைத் தேடுகின்றனர். (இராஜகிரிய).

▸ ▸ ▸

(2011/E.F/2269) வயது 25, உயரம் 5'2". A.O.G சபை, க.பொ.த(உ/த) Dip in Teaching கற்று, ஆங்கில ஆசிரியையாக கடமையாற்றும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (தெஹிவளை).

▸ ▸ ▸

(2011/E.F/2270) வயது 29, Praise Lanka சபை, வேதாகம கல்லூரியொன்றில் Administrator ஆக கடமையாற்றும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (மொறட்டுவ).

▸ ▸ ▸

(2011/E.F/2271) வயது 28, உயரம் 5'2". அங்லிக்கன் சபை, க.பொ.த(உ/த) Computer Diploma கற்று, தனியார் நிறுவனமொன்றில் கடமையாற்றும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (வத்தளை).

▸ ▸ ▸

(2011/E.F/2272) வயது 33, உயரம் 5'3". கிதுசெவன சபை. க.பொ.த(சா/த) கற்று, தையல் ஆசிரியையாக கடமையாற்றும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (வத்தளை).

▸ ▸ ▸

(2011/E.F/2273) வயது 31, உயரம் 5'2". A.O.G சபை, க.பொ.த(சா/த) கற்று, மேற்பார்வையாளராக கடமையாற்றும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (கொழும்பு 10).

▸ ▸ ▸

(2011/E.F/2274) வயது 33, உயரம் 5'2". சுவிஷேச கூடார சபை. க.பொ.த(சா/த), தையல் டிப்ளோமா, கேக், ஐசிங் கற்ற யாழ். கிறிஸ்தவ சிறார் இல்லத்தில் வளர்ந்த பெற்றோரற்ற மணமகளுக்கு, மணமகனை தேடுகின்றனர். (கல்கிஸ்சை)

▸ ▸ ▸

(2011/E.F/2275) வயது 25, உயரம் 5'4". அங்கிலிக்கன் சபை, CIMA கற்று, தற்போது விரிவுரையாளராக கடமையாற்றும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (கொழும்பு 12).

▸ ▸ ▸

(2011/E.F/2276) வயது 32, உயரம் 5'3". R.C, க.பொ.த(உ/த) கற்று, கணக்காளராக கடமையாற்றும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (கொழும்பு 5).

▸ ▸ ▸

(2011/E.F/2277) வயது 35, உயரம் 5'4". R.C, க.பொ.த(சா/த) கற்று, முன்பள்ளி ஆசிரியையாக கடமையாற்றும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (ரத்தோட்டை).

▸ ▸ ▸

Registered in the Department of Post of Sri Lanka under No. QD/96/News/2011

இலங்கை SRI LANKA 18.8.11 COLOMBO 024.00 PB1519

To:

BACK TO THE BIBLE
சத்தியவசனம்

From :
Sathiyavasanam
P.O. Box 1012
Colombo.

# சத்தியவசன புத்தகசாலை

வேதாகமம்,
ஆவிக்குரிய புத்தகங்கள்,
கிறிஸ்தவ பாடல்கள்
திரைப்படங்கள் அடங்கிய ACD/VCD/DVD,
சிறுவர்களுக்கான புத்தகங்கள்,
அன்பளிப்பு பொருட்கள்...




திங்கள் முதல் வெள்ளிவரை
(காலை 9 முதல் மாலை 6 வரை)
சனிக்கிழமை
(காலை 9 முதல் பகல் 1 மணிவரை)
திறந்திருக்கும்.

யாழ்ப்பாணம் புத்தகசாலை - டிம்மர் மண்டபம், 9, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
ஜீவனமக புத்தகசாலை - ராவதாவத்தை, மொரட்டுவை.
காலி புத்தகசாலை - 2, பொனவிஸ்டா வீதி, உனவடுன, காலி.

**120A, தர்மபால மாவத்தை, கொழும்பு 7.**
**011-2695441, 011-2687040**


Published by Back to the Bible Broadcast, P.O. Box 1012, Colombo.
Printed at New Ferrine Printers (Pvt) Ltd, No.19, "Saumya Uyana", Halpita, Polgasowita